சிவமயம்.

குமரன்.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின். (திருவள்ளுவர்.)

சதங்கை ௧. | காரைக்குடி துந்துபி பங்குனி ௧௰௨ | மணி ௧௧,௪௨

முருகக் கடவுள்.

வீறுடையாய் வேலுடையாய் வெற்புடையாய் விண்ணுடையாய்
நீறுடையாய் நேயர்கட னெஞ்சுடையாய்—கூறு
முதல்வாவோ ராறு முகவாமுக் கண்ணன்
புதல்வாநின் றாளெம் புகல்.

—இராமலிங்கசுவாமிகள்.

உமாதேவியார்.

பங்கயமுங் குவலயமு மாம்பலுஞ்செங்
காந்தளுமாம் பலபூப் பூத்துங்
கொங்குலவு தளவரும்புங் கோங்கரும்பு
மரும்பிவரக் கொண்டு மேலாங்
தங்கவரை யிடைப்பிறந்து வெள்ளிவரை
யிருக்குமுக்கட் டருவின் மீது
துங்கமுறப் படர்ந்துமணந் திருக்குமொரு
பூங்கொடியைத் தொழுது வாழ்வாம்.

—கந்தசாமிக் கவிராயர்.

திருப்பல்லாண்டு.

மிண்டுமனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசற்காட் செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்தபொரு ளளவில்லதோ ரானந்த வெள்ளப்பொருள்
பண்டுமின்று மென்று முள்ளபொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

—சேந்தனார்.

புத்தகாலயங்கள்.

II

சென்ற வியாசத்தில் புத்தகாலய வியக்கத்தைப்பற்றியும், அவ்விஷயமாக உலகில் ஆங்காங்கு செய்யப்பட்டுவரும் முயற்சிகளைப்பற்றியும் சில குறிப்புகள் வரைந்திருந்தோம். இம்முறை அமெரிக்காவில் இவ்வியக்கம் தோன்றி வளர்ந்து வந்துள்ள நிலைமையைப் பற்றிச் சிறிது கூறுவாம்.

உலகத்திலேயே, இதுகாலை புத்தகாலய வியக்கத்தைக்கண்டு, அதையற்புதமாக வளர்த்து வந்திருப்பதில் முதன்மையானது அமெரிக்கா கண்டமாகும். இக்கண்டத்தி லேற்பட்டுள்ள புத்தகாலயங்களில் சாலிஸ்பரி பட்டணப் புத்தகாலயம் மிகவும் புராதனமானது. அஃது ௧௮௦௩-ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டுப் பொதுமக்களால் போஷிக்கப்பட்டது. இதற்கு முன்னால் டாக்டர் பிரேயவர்களாற் சில சர்வகலாசாலைப் புத்தகாலயங்களேற்படுத்தப் பட்டனவாயினும், அவை பொதுமக்களுக்கு உபயோகப்பட்டனவல்ல. அமெரிக்கா ஐக்யமாகாணத்தில் இலவசப் புத்தகாலய வியக்கமானது ௧௯-வது நூற்றாண்டி னிடையில் தோன்றியதெனக் கூறப்படுகிறது. இதற்கு இரண்டு காரணங்களுண்டு. ௧௮௪௦ல் ஹொராஸ்மானால் நடத்தப்பட்ட கல்வியாராய்ச்சி யியக்கமும், ௧௮௨௬-ம் வருடத்தில் ஆரம்பமான தார்க்கிக சங்க வியக்கமும் இப்புத்தகாலய வியக்கத்திற்குத் துணையாயின. அச்சபைகளி லநேக உபந்நியாசங்கள் செய்யப்பட்டும், அநேக வியாசங்க ளெழுதிப் படிக்கப்பட்டும் வந்தன. அவற்றைத் தயாரிப்பதற்குப் பல நூல்களினின்றும் விஷயங்களைத் திரட்ட வேண்டிய அவசியமுண்டாயிற்று. அதனால் மக்கள் புத்தகாலயங்களின் அவசியத்தைப் பற்றி யுணர்ந்து, பல புத்தகாலயங்களை ஒன்றன்பி னொன்றாக ஏற்படுத்த முற்பட்டனர். ௧௮௩௫-ம் ஆண்டில் நியூயார்க் ராஜ்யத்தில் துரைத்தனத்தார் தம்மாகாணத்தில் ஸ்தாபிக்கப்படும் ஜில்லா புத்தகாலயங்க ளனைத்திற்கும் பொருளுதவி செய்யச் சட்டம் பிறப்பித்தனர். பின்னால் அச்சட்டத்தை இருபத்தொரு மா

காணத்தாரும் ஆமோதித்தனர். அதன் பின்னர் பின்னாட்களில் நகரபரிபாலன சபைகளுக்கு இலவசப்புத்தகாலயங்களை யேற்படுத்துவதற் குரிமையளிக்கப்பட்டது. ௧௮௯௦-ம் வருடத்தில் மஸ்ஸா ஸெட்ஸ் மாகாணத்தார் தம்மாகாணத்திலுள்ள புத்தகாலயங்களை மேற்பார்த்து வரவும், அவற்றை யேற்றவகையில் அபிவிருத்தி செய்துவரவும் துரைத்தனப் புத்தகாலயக் கமிஷனொன்றை யேற்படுத்தினர். நாளடைவில் எல்லா மாகாணங்களும் இக்கமிஷனை யேற்படுத்தின. அங்குள்ள பெரிய புத்தகாலயங்கள் யாவும் சதா புதிய புதிய வழிகளைக் கண்டுபிடிப்பதற்கு விரைந்துகொண்டிருக்கும். தற்போது அமெரிக்கா ஐக்ய மாகாணத்தில் ௧௮·ஆயிரம் புத்தகாலயங்கள் சரியாக வேலைசெய்துவருகின்றன. இவை தனவந்தர்களாகிய பொதுமக்களாலும், துரைத்தனத்தாலும் செய்யப்படும் பணவுதவியால் பரிபாலிக்கப்பட்டுவரும். அநேகவிடங்களில் புத்தகாலயங்கள் காலஞ்சென்ற பெரியோர்களின் ஞாபகச் சின்னங்களாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அப்புத்தகாலயங்களின் சொந்தக் கட்டிடங்களைப்போன்ற உயர்ந்த மேலான கட்டிடங்களை நம்மிலநேகர் பார்த்திருக்கமாட்டார்களென்றும் சொல்லப்படுகிறது. அண்ட்ருகார்னிஜி என்ற கோடீசுவரர் அமெரிக்கா புத்தகாலயத்திற்கு முக்கிய போஷகராவர். அவரது உதவியைப் பெறாத புத்தகாலயம் அத்தேசத்திலில்லையாம். இவர் முதலில் ஒரு சிறு கிராமப் புத்தகாலயத்தில் வாசித்து அறிவு முதிர்ச்சி யடைந்து பின்னர் கோடீசுவரராயினார். அவர் சுமார் இரண்டாயிரம் புத்தகாலயங்களுக்கு ௩௬-கோடி ரூபாய்வரை உதவிசெய்திருக்கின்றாராம். அத்தேசத்தில் தலைமைப் புத்தகாலயங்களில், புத்தகாலயத் தலைவர்களைத் தயாரிக்கும் வகுப்புகளேற்படுத்தப்பட்டுள்ளன. புத்தகாலய சாஸ்திரத்தைக் கற்கும் மாணவர் பட்டப் பரீக்ஷையில் தேறினவராய் மூன்று வருடங்கள் பிரத்தியேகமாக இச்சாஸ்திரத்தைக் கற்கவேண்டும். அங்கு "அமெரிக்கா புத்தகாலயச் சங்கம்" என்றதொரு பெருஞ்சபைபொதுவில் தோன்றியுழைத்து வருகிறது. அஃது ௧௮௭௬-ல் பிரசித்திபடைத்த புத்தகாலயத் தலைவர்களால் பிலடல்பியா நகரத்தில் ௧௦௩·அங்கத்தினர்களோடு ஸ்தாபிக்கப்பட்டது. அச்சங்க நடவடிக்கைகள் அவ்வப்போது

புத்தகாலயப் பத்திரிகையில் வெளியாகும். ௧௯௦௭-ல் அச்சங்கத்தாரே தனிமையில் அப்பத்திரிகையை வெளியிட ஆரம்பித்தனர். அப்பத்திரிகையில் புத்தகாலய வியக்கத்தைப்பற்றியும் சாஸ்திரீவாராய்ச்சிகளைப்பற்றியும் அரியவியாசங்கள் சித்திரப்படங்களோடு எழுதப்படுகின்றன. அச்சங்கத்தின் முக்கியவேலைகளாவன:— தேசத்தில் ஆங்காங்கே புத்தகாலயங்களை யதிகமாக வேற்படுத்தலும், அவ்விதம் மேற்பட்டுள்ளவை நன்கு நடைபெற்று வரப்பார்த்தலும் பொதுஜனங்களுக்கு அவற்றை எவ்வெவ்வகையில் பயன்படச்செய்யலாமென் றாலோசித்துப் புதிய சீர்திருத்தங்களை யுண்டாக்கி அவ்வியக்கத்தைப் பரவுற வளர்த்தலும் ஆகியனவாம். இப்பொழுது அச்சங்கத்தில் ௧௩௦௦-முக்கிய அங்கத்தினர்களிருக்கின்றனர்.

அந்நாட்டு இலவசப் புத்தகாலயங்களின் அமைப்புகளைப் பற்றி கேள்விப்படுபவர் பெரிதும் வியப்படைவார்கள். முக்கியமான புத்தகாலயக் கூடமானது அதிவிசாலமாகப் பெரிதாகக்காணப் படும். அதன் சுவர்கள் பலவிதக்கொடிகளாலும் பதுமைகளாலும் நிறைக்கப்பெற்று அந்நாட்டுச் சிற்பத்தொழிற் சிறப்பை எடுத்துக் காட்டும். கணக்கற்ற நாற்காலிகளும் மேசைகளும்கூடத்தில் வரிசை வரிசையாக நெருக்கப்போடப்பட்டிருக்கும். தொங்கவிடப்பட்டுள்ள மின்சாரவிளக்குகள் எங்கும்சொலித்துக்கொண்டிருக்கும். மேசைகள்மீதும் பலகணிகள்மீதும் பலவித அழகியசெடிகள் பாத்திரங்களில் வைத்துப் பரிபாலிக்கப்பட்டிருக்கும். சிலர் பத்திரிகைகளைப் படித்துக்கொண்டிருப்பர். வேறு சிலர் புதிதாக வெளிப்போந்த நாவல்களையும் தேச சரித்திரங்களையும் ஆவலோடுவாசித்துக் கொண்டிருப்பர். வித்தியார்த்திகள் குன்றுகள் போல் புத்தகங்களைத் தம்முன் குவித்துக்கொண்டு ஆராய்ந்துகொண்டிருப்பர். பலர் இவ்விநோதக்காட்சிகளை வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பர். பலவாறு கூறுவானேன்? அஃதொரு சிங்கார மாளிகையாகவே யிருக்கும். இதுவன்றி வெவ்வேறு பாகங்களுக்கு வெவ்வேறு அறைகளுண்டு. விரும்புவோர் அப்புத்தகாலயத்தினின்றும், புத்தகங்களை தடவைக்கு இரண்டுவிதம் தம் வீட்டுக்குக்கொண்டு

செல்லவும் ஏற்பாடுகளுண்டு. மாணவர்களும், உபாத்தியாயர்களும் அதிகப் புத்தகங்களை வாங்கிச் செல்லலாம். குறித்த காலத்திற்குமேல் அப்புத்தகங்களைத் திரும்பச்சேர்க்காமல் வைத்திருந்தால் அப்படிப்பட்டவர் நாளொன்றுக்கு இரண்டு பைசாக்கள் வீதம் அபராதம் செலுத்தவேண்டும்.

நியூயார்க்கிலுள்ள தலைமைப் புத்தகாலயத்தில் ௧௯-லக்ஷம் புத்தகத்தொகுதிக ளிருக்கின்றன. வருடந்தோறும் அறுபது லக்ஷம் புத்தகங்கள் வெளியில் இரவல் கொடுக்கப்படுகின்றன. குறித்த தவணைக்கு மேற்படுவதால் வாசகர்கள் செலுத்தும் அபராதத்தொகை வருடத்திற்கு சராசரி எழுபத்தைந்தாயிரரூபா யாதலாம். அப்புத்தகாலயத்தில் புத்தகங்களைக் கதவில்லாத அறைகளில் அடுக்கிவைக்கின்றனர். வாசகர்கள் தாமாகவே விரும்பியவற்றை எடுத்து வாசிக்கலாம். பெரியநகரங்களிலுள்ள புத்தகாலயங்கள் யாவும் காலை அ-முதல் மாலை ௧0-மணிவரையில் திறந்து வைக்கப்படுகின்றன. விடுமுறை நாட்களில் நடுப்பகல் ௨-மணி முதல் இரவு பத்துமணிவரையில் அவை திறந்து வைக்கப்படும்.

புத்தகாலயத் தலைவர்கள் எப்பொழுதும் புதிய ஜனங்களைச் சேர்த்து, அவர்களுக்குப் புத்தகங்களைப் படிக்க விருப்பமுண்டாக்க முயன்று கொண்டிருப்பர். பெரிய நகரங்களில் தலைமைப் புத்தகாலயத்திற்குக் கிளைகளாக நகரத்தின் பலபாகங்களிலும் கிளைப் புத்தகாலயங்களை யேற்படுத்தி அவற்றில் குறித்த அளவில் புத்தகங்கள் வைத்துவைக்கப்படுகின்றன. அங்கில்லாத புத்தகங்களை விரும்பிய பொழுது தலைமைப் புத்தகாலயத்தினின்றும் வரவழைத்துக் கொள்ளுவர். நியூயார்க் நகரப் புத்தகாலயத்திற்கு நாற்பத்தொரு கிளைப்புத்தகாலயங்களிருக்கின்றன. அவை மூன்று லக்ஷம் ஜனங்களுக்குக் கல்வியறிவை யூட்டி வருகின்றன. கிளைப் புத்தகாலயத்திற்கும் வெகு தூரத்திலிருப்பவர்களுக்கு உபயோகமாகும்படி யாத்திரைப் புத்தகக்களஞ்சியங்களென்று பெரிய பெட்டிகளில்வேண்டிய புத்தகங்களை வைத்து அதற்குரியவர்கள் வேண்டிய இடங்களுக்குக் கொண்டுசென்று வாசகர்களுக்கு உதவு

கிறார்கள். இவ்விதம் நியூயார்க்நகர்ப் புத்தகாலயமானது ௬௦௦. ஸ்தலங்களுக்கு யாத்திரைப் புத்தகக் களஞ்சியங்களை யனுப்பி வருகிறது.

இப்புத்தகாலயங்களில் வாசகர்கள் கேட்கும் சந்தேகங்களுக்கு விடைகூறுவதற்கென ஓர் தலைவ ரமர்த்திருப்பார். அவர் வாசகர்கள் கேட்கும் எல்லாச் சந்தேகங்களுக்கும் ஏற்றவிடை யளித்துவருவார். அநேகர் புத்தகங்களைப் பார்க்காமலேயே தமக்கு வேண்டியசந்தேகங்களை அத்தலைவரைக் கேட்டுத்தெரிந்துகொள்வதுண்டு. ஸெய்ன்ட் லூயிஸ் இலவசப்புத்தகாலயத்தார் சொந்தக்கடிதங்களை எழுதிக்கொள்ளும் வாசகர்களுக்குத் தனியறைகளை யமைத்திருக்கின்றனர். சரசமான கடிதங்களும் உறைகளும் இலவசமாகவே கொடுத்திருக்கின்றனராம். சுருக்கெழுத்துக்காரர், டைப்பிஸ்டுகள் முதலியவர்களும் அங்கிருப்பர். தபால் முத்திரைகள் சகிதம் அங்கே விற்கப்படுகின்றன. புத்தகாலயத்தை யடுத்து பிரசங்கமேடைகளும் பெண்கள் சபைகளும், சிறுவர் சங்கங்களும் ஏற்பட்டிருக்கின்றனவாம். புத்தகாலயத் தலைவர்கள் அங்கு வரும் வாசகர்களைத் தமது இல்லத்திற்கு வந்த விருந்தினர்களைப் போல்பரிவுடன் உபசரிக்கின்றார்களாம்.

வாஷிங்டன் நகரத்திலுள்ள தேசியப்புத்தகாலயமானது மிகவும் புராதனமானதும் பிரம்மாண்டமானதுமாம். அமெரிக்காவுக்கே இஃது தலைமையானதெனக்கூறலாம். இப்பொழுது அப்புத்தகாலயம் மூன்றடுக்கு மேடைகளுடைய ஒரு பெரிய மாளிகையிலமைக்கப்பட்டுள்ளது. சுமார் இருபதுகோடி ரூபாய் செலவழித்து அம்மாளிகையைக் கட்டியிருக்கின்றனர். புத்தகாலயத்தின் வேலைகளுக்கு ௩௦௦ உத்தியோகஸ்தர்களிருக்கின்றனர். அப்புத்தகாலயத்திலேயே ஓர் அச்சுக்கூடமு மமைக்கப்பட்டுள்ளது. இதன் தலைமை உத்தியோகஸ்தருக்கு வருடச் சம்பளம் ௧௩,௫௦௦ ரூபாய். புத்தகாலயத்தில் ௨௩,௩௮,௨௫௫, புத்தகங்களிருக்கின்றன. ௬௦௦-சமாசாரப்பத்திரிகைகளும், ௬௬௭௬-சஞ்சிகைகளும் அங்கு வருகின்றன. வாசகசாலையில் ஒரே சமயத்தில் ஆயிரம்பேர் உட்கார்ந்து வாசிக்க இடமுண்டு. இதைபடித்து நவீன

சாஸ்திரங்களையும், பூர்விக சரித்திரங்களையும், பண்டைய நூல்களையும் ஆராய்ந்து வெளியிடும் பண்டிதசபைகளு மேற்படுத்தப் பட்டுள்ளன. அச்சபையார் தாம் ஆராய்ந்தவற்றை அவ்வப்போது பத்திரிகைகளாகவும், புத்தகங்களாகவும் வெளியிட்டுப் பிரபஞ்சத்தி லுள்ள முக்கியமான ௬௦௦ புத்தகாலயங்களுக்கு இலவசமாக அனுப்பிவருகின்றனர். அவ்வுதவியை நமது நாட்டில் சென்னை, பம்பாய், கல்கத்தா சர்வகலாசாலைப் புத்தகாலயங்கள் மாத்திரமே யடைந்து வருகின்றனவெனத் தெரிகிறது.

மேல் நாடுகளில் புத்தகாலய விஷயமாக இவ்வித விசேஷ வேலைகள் நடைபெற்றுவருகையில் பண்டுமுதல் சிறந்திவாய்ந் திருந்த நமது நாடு அதிலும் நந்தமிழகம் இதைப்பற்றிச் சிறிதும் கவனமின்றி வாளாவிருந்து வருதல் வருந்தத்தக்கதல்லவா?

என். வேங்கடரமணன்.

'ஆநந்த நிலையம்' சேலம்.

சிவநாமங்களின் பெருமை.

(துடிசைகிழார் அ. சிதம்பரனார் அவர்கள் எழுதியது.)

(௩௪௪-ம்பக்கத் தொடர்ச்சி.)

இன்னொன்று என்னவென்றால் சிவபெருமான் எல்லா சிவ ராசிகளையும் சமத்துவமாகப் பாவிக்கிறார். வித்தியாசமாகப் பாவிப்பதில்லை. அவருக்கு எல்லாரும் சரி. குற்றம் செய்தால் தண்டிக்கிறார். புண்ணியம்செய்தால் சொர்க்காதி நலங்களை அளிக்கிறார் சீவர்களுடைய நன்மை தீமைகளைப் பரிசோதித்து அதற்குத்தக்க பலன்களை அளிக்கும் நியாயாதிபதி. தராசுமுனைபோல் நடுநிலைமை யுள்ளவர். பாரபக்ஷமின்றித் தீர்மானிப்பவர். எப்போதும் நடுநிலைமையிலேயே நாட்டமுடையவர். என்பனவாதி பொருள்கள் வெளிப்படுகின்றன. "திரிநேத்திரர்" என்றால் இப்பொருள்கள் எல்லாம் வெளியாவது கஷ்டம்.

(௬) காலனை வென்றவர்:—சிவபெருமான் மார்க்கண்டருக்காகக் காலனைக் காலால் உதைத்துக்கொன்றவர் என்பது உலகம் அறிந்ததே. காந்தபுராணம் திருக்கடையூர்ப்புராணம் முதலியன மார்க்கண்டேயருடைய புராணத்தைத் தெளிவாகக் கூறுகின்றன. இந்த நாமத்தைக் "கூற்றை யுதைத்தவர்" எனவும் வழங்குகிறார்கள். இதைத்தான் சமஸ்கிருதத்தில் "மிருத்தியுஞ்சயர்" என வழங்கக்காண்கிறோம். காலனை எப்படி வென்றார்? காலால் உதைத்து வென்றார். கால் என்றால் பாதத்துக்கும் வாயுவுக்கும் பெயர். வாயுவாகிய வாசியால் காலனை வென்றவர்.

"காற்றைப்பிடிக்கும் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைக்கும் குறியதுவாமே"

பாமர ஜனங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளச் சிவபெருமான் யமனைக் காலால் உதைத்ததாகப் படம் எழுதிக்காட்டுகிறார்கள். காலால் உதைத்தார் என்று ஞாபகப்படுத்திக் கொண்டால் வாசி யுணர்வு எப்போதாவது நிகழும் என்பதற்காகவே பெரியோர்கள் அன்னணம் உருவகப்படுத்தினது. மார்க்கண்டர் என்பதும் இப்பொருளையே உணர்த்தும். மார்—மார்பு—அனாகதம். இதன்எழுத்து "சி". கண்டம்சுழுத்திஸ்தானம். இதன்எழுத்து "வ" ஆகையால் இவரும் வாசியால் காலனைவென்றவர். இவர் முக்கியமாய்க் கண்டத்தைக்கொண்டு கருமமுடித்தவர்.

"கண்டத்தைக்கொண்டு கருமமுடித்தவர்
பிண்டத்தில் வாரா ருந்தி பற
பிறப்பிறப்பில்லை யுந்தி பற"

அதனாலேயே மார்க்கண்டர் என்ற நாமமும் ஏற்பட்டது. சிவபெருமான் ஆதியந்த மில்லாதவராயிற்றே. அவரேன் வாசி அப்பியாசம் செய்யவேண்டும் என்று ஒரு கேள்வி நிகழலாம். ஆசிரியன் மாணாக்கருக்கு உபதேசிக்கு முறையில் சிவபெருமான் செய்து காட்டினாரே யொழிய வேறின்று. ஈண்டு சிவபெருமான் என்றது மகேசுரரையே. ஸ்ரீநடராஜ மூர்த்தி உருத்திராக்கவடத்தைக் கையிலேற்று அஞ்செழுத்தைக் கணிப்பது எற்றுக்கு என்று பௌத்தர்கள் கேட்டகேள்விக்கு மாணிக்கவாசகசுவாமிகள்

இறந்தவிடை இங்கு கவனிக்கற்பாலது. எல்லா உயிர்களையும் கொண்டுபோகிறவன் எமன். எமனையே சிவபெமான் உதைத்து விட்டார் என்றால் இறப்பில்லாதவர் என்று பாமர ஜனங்கள் எளிதில் அறிந்து கொள்வார்கள். இம்மாதிரி கூற்றை யுதைத்த தெய்வத்தைப் பிறமத நூல்களில் காண்பது அரிது. ஆகையால் மற்றத் தெய்வங்கட்கு இறப்புண்டு சிவபெருமான் ஒருவரே இறவாதவர் என்பது போதருகின்றது. சித்தாந்த இரகசியப் பொருள்களை நம் பெரியோர்கள் எல்லாரும் எளிதில் உணரும் வண்ணம் எந்தெந்தவிதமாகவோ அடக்கிப் பிண்டப் பொருளாக வெளியிட்டிருக்கின்றார்கள். உதாரணமாக:—

காசி என்ற வார்த்தையை எடுத்துக்கொள்ளுங்கள். காசி என்பது மகாக்ஷேத்திரம். அங்கே சென்று இறந்தால் மோக்ஷம் என்று பலவாறாக அதன் மகிமையைக் காட்டியிருக்கின்றார்கள். அதனாலேயே ஜனங்கள் காசி காசி என்று பாராயணம் செய்து கொண்டே இருக்கின்றார்கள். இப்படி அவர்கள் செய்துகொண்டே இருந்தால் எப்பொழுதாவது ஒரு சமயத்தில் உண்மையுணர்வு வாராதா என்பதே. உண்மையுணர்வாவது காசி அதாவது "சி" என்ற எழுத்தைக் கா காப்பாற்றிக்கொள் என்பதே. இதனை "சியெழுத்தொன்றைச் சிந்தையிற் கருதத் தூயதற் சுடராய்த் தோன்றுவையென்றான்" என்ற சிற்றம்பல நாடிகள் வாக்கைக் கவனிக்க. இதனை மனதில் கொண்டே சிவவாக்கியர் "காசி காசி யென்று நீர் கால்கடுக்க நடக்கிறீர்" என்று கூறியதும். "காசியில் வாசி அவிநாசி" என்ற வழிமொழியும் இதனை வலியுறுத்தும்.

(௫) கங்காளர்:—அதாவது பிரமாவின் ஐந்தில் ஒரு சிரத்தைக் கிள்ளிச் சிவபெருமான் கையில் கொண்டார். "பிரமகபாலர்" "காபாலி" என்றும் வழங்குகின்றார்கள். பிரமா சிருட்டிகர்த்தர். பிரமனை வென்று அவருடைய தலையோட்டைக் கைக்கொண்டவர் என்றால் பிறப்பில்லாதவர் என்று கூறவும் வேண்டுமோ? பிரமன் தலையோட்டைக் கையில்கொண்டதாகப் படம் எழுதிக்காட்டினதின் உண்மை பாமர ஜனங்கள் சிவபெருமான் பிறப்பில்லாதவர் என்று அறிந்து கொள்ளும்பொருட்டே. காலனை வென்ற திரு

விளையாடலும் பிரமனைச் சிரமரிந்த திருவிளையாடலும் இரண்டும் சேர்ந்து சிவபெருமான் ஆதியந்தமில்லாதவர் என்பதை விளக்கு கின்றனவன்றோ? சோமேசர் முதுமொழி வெண்பாவில் "எல்லார் பிறப்பும்" என்ற பாசுரம் ஈண்டு கவனிக்கத்தக்கது.

இம்மாதிரி சிருட்டிகருத்தாவையே வென்றதாக பிரமத நூல்களில் பிற தெய்வங்களைக் கூறவில்லை. ஆகையால் சிவபெருமான் ஒருவரே பிறப்பில்லாதவர். மற்றத் தெய்வங்கள் பிறக்கும் வேதனைப்படும் இறக்கும் என்பது போதருகின்றது.

"எலும்பும் கபாலமும் ஏந்தி யெழுந்த
வலம்பன் மணிமுடி வானவராதி
எலும்பும் கபாலமும் ஏந்திலனாகில்
எலும்பும் கபாலமும் இற்றுமண் ணாமே"

—திருமந்திரம் காமிகம்.

எம்பெருமான் எலும்பும் கபாலமும் கொண்டதன் காரணத் தையும் கருத்தையும் திருமூலநாயனார் இனிது விளக்கியுள்ளார். எம்பெருமானை கூற்றுவனைக் குமைத்தகோன். அதாவது கூற்று வனுக்குங் கூற்றுவன் என்பதை மேலே காட்டினும். ஆகையால் சர்வ சங்கார காலத்தில் சர்வ அண்டங்களும் நீறாக்கப்பட்ட பொழுது பிரம விண்டுக்கள் இல்லாமல் முடிகிறார்கள்.

நூறுகோடி பிரமர்கள் நுங்கினால்
ஆறுகோடி நாரணர் அங்ஙனே"

—திருநாவுக்கரையர்.

ஆகையால் மீண்டும் உலகத்தைப் படைக்க வேண்டுமானால் சிவபெருமான்தான் படைக்கவேண்டும். அப்படிப்படைப்பதற்கு முதற்கருவியாக இருப்பது மாயை. அதுதான் எலும்பும் கபால முமாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. அது மிருதிப்படுத்தப்பட்டு சிவபெருமான் கையில் இல்லாவிட்டால் சிருஷ்டி செய்வதுகூடாத காரியம். ஆகையாற்றான் சிவபெருமான் முதற்காரணமாயுள்ள "எலும்பையும் கபாலத்தையும்" கையிலேயே வைத்துக்கொண்டி ருப்பது. அவர் அதைக்கையில் வைக்காமல் வேறிடத்தில் வைத்து

விட்டாலோ பிரயோசனப்படாது. அது வேறிடத்தில் நிலைக்காது. இக்கருத்தைத்தான் திருநீலகண்டநாயனார் புராணத்திலும் அமர்நீதிநாயனார் புராணத்திலும் நம் சேக்கிழார்பெருமான் செவ்வனே விளக்கியிருக்கிறார். திருவோட்டையும் கோவணத்தையும் நாயன்மார்களிடத்தில் கொடுத்துவிட்டு சின்னாட் பொறுத்துவந்துகேட்கும்போது "வைத்தவேறிடத்தில் காணாது" நாயன்மார்கள் திகைத்தார்கள் என்று பாடியிருக்கிறார். "வைத்தவேறிடத்தில்காணாது" என்பதற்கு அநேகர் இக்கருத்தை அறியாது வெவ்வேறு விதமாகப் பொருள் செய்கிறார்கள். அது பொருந்தாது. மேலே காட்டிய சிவ நாமத்தால் சிவபெருமான் "சர்வசுதந்தரன்" என்பதும் அவனே எல்லாவற்றிற்கும் மூலகாரணன் என்பதும் இனிது விளங்கும். இக்கருத்தையறியாமல் சிவபெருமான் எலும்பையும் கபாலத்தையும் அணிந்து கொண்டிருக்கிறார். நல்ல அணிகலன்கள் இருக்க நகு வெண்டலையை யணிவானேன்! என்று இழித்துப்பேசுவார்கள். "வைத்தவேறிடத்தில் காணாது" என்பதற்கு "சிவபெருமான் கையில் இருக்க வேண்டிய இடத்தை விட்டு வேறிடத்தில் வைத்துக்காணாது" என்பதே பொருளாம். வேறு இடத்தில் வைத்தால் அது இற்றுமண்ணாகிப்போம் என்பது கட்டளை.

(எ) ஈமத்தாடி; சுடலையாடி:—என்பன ஒரு பொருட் கிளவிகள். சர்வசங்கார காலத்தில் சர்வ அண்டங்களும் நீறாக்கப்பட்டபொழுது சர்வ ஆன்மாக்களும் நீறாக்கப்பட்ட புழுதியும் தங்க இடமில்லாமல் தவித்துக்கொண்டிருக்கும். காலம் இடம் அற்ற சமயம் அப்போது. ஆகையால் புழுதியும் ஆன்மாவும் இறைவனையே நாடிநிற்கும். புழுதியெல்லாம் இறைவன்மேற் படிந்து இருப்பதையே இறைவன் விபூதிதரித்துக் கொண்டிருக்கிறான் என்று கூறுவது. ஆன்மாக்களும் இறைவனிடத்தில் கீழ்பாகத்தில் அதாவது அதோமுக பாகத்தில் ஒடுங்கும். சிவபெருமான் சர்வ அண்டங்களினுடைய புழுதி படிந்திருப்பவரானதால் "ஈமத்தாடி" என்பது ஆன்மாக்கள் அதோமுகத்தில் தங்கியிருப்பது கருத்துத் தோன்றும். இதைத்தான் கண்டங்கறுத்தது என்பர்.

"ஆயேபிரான் முகமைந்தொடு மாருயிர்
ஆயேபிரானும் வ்வேதாமுகமானா
தாயேபிரானுக்குத் தன்மொழிலக்கும்
நாமே பிரானுக்கு நரியல் பாமே"

"அண்டமொ டெண்டிசை தாங்குமதோமுகம்
கண்டங் கறுத்த கருத்தறிவாரில்லை
உண்டது நஞ்சென் றுரைப்பர் உணர்விலோர்
வெண்டலை மாலை விரிசடையோர்க்கே"

புழுதி என்னும் பதத்தில் இடையெழுத்துக்கெட்டு முதனீண்டு பூதி என்றாய், வி என்னும் உபசர்க்கம் சேர்ந்து விபூதி என ஆயிற்று. இதனைவிட்டு விபூதிக்குச் சமஸ்கிருத தாது விரிப்பது பொருந்தாது.

(அ) வெண்டலைமாலையன்:— சர்வசங்காரகாலத்தில் சர்வ ஆன்மாக்களும் தங்க இடமில்லாமல் இறைவனிடத்திலேயே ஒடுங்குவதால் இறைவனுக்கு இப்பெயருண்டாயிற்று. இதனைச் சமஸ்கிருதத்தில் காயாரோகணர் என்பார்கள். சர்வ ஆன்மாக்களுடைய காயத்தை தன்மேல் ஆரோகணிக்கச் செய்பவன் என்பது பொருள்.

(ஆ) நஞ்சப்பர்; நஞ்சுண்டகண்டர் என்பனவாதிய நாமங்களும் மேலே கூறிய கருத்தை விளக்கும். ஆன்மாக்கள் ஆணவ மலத்தால் பந்திக்கப்பட்டவாதலால் விஷமாகிய ஆணவமலத்தோடு கூடிய ஆன்மாக்கள் அதோமுகத்தில் தங்கியிருக்கும் காட்சியே கண்டங் கறுத்ததாகும். அதனையே உருவகமாய் நஞ்சுண்டதாகப் புராணங்களில் கூறியுள்ளார்கள். பாமரஜனங்கள் எளிதில் அறிந்துகொள்ளும்பொருட்டு "திருப்பாற்கடல் கடைந்த" கதையையும் எழுதிவைத்தார்கள். "ஆலாலசுந்தரர்" என்றும் வழங்குகிறார்கள்.

வேத சிவாகமம்.

(பண்டித மயில்வாகனனார் B. sc, Lond. எழுதியது.)

"வேதசிவாகமங்களுக்குப் பேதங்காண்கின்றிலம்; வேதமேசிவாகமம்

—நீலகண்டசிவாசாரியார்.

[பல்லாவரம் பொதுநிலைக்கழகத்துத் தலைவராகிய மறைமலையடிகள் "சைவசித்தாந்தமும் ஆரியவேதமும்" என்னும் தலைப்பெயர்க்கீழ் எழுதிய கட்டுரையை யாராய்வானெடுத்துக்கொண்டாம். அங்ஙனம் ஆராயுமிடத்து அக்கட்டுரையிற் பொருந்தாமுடிபென எமக்குத்தோற்றுவனவற்றைத் தொகுத்து நிறுவி அவை இன்ன இன்னகாரணங்களாற் பொருந்தாமையுடையன எனக்காட்டி வேதகருதிய பொருளைத் தெளிவுறுத்துதற்குச் சிறந்த முறையாகலின் இவ்வியாசம் அடிகளது கட்டுரையைப் படித்தமாணவனொருவன் ஆண்டெழுந்தஐயப்பாடுகள் சிலவற்றை நீக்குதல்வேண்டித் தனது ஆசிரியர்பாற் சென்று வினய வினாக்களும் அவரிறுத்தவிடைகளுமாக முடிக்குபெற்றும்.]

மாணவகன்:—ஐய, இருக்குமாமறையில் "உருத்திரர்க்குரிய பதிகங்கள் ஆரியராற் செய்யப்படாமல் தமிழர்களாற் செய்துசேர்க்கப்பட்டன" என்று கூறிய மறைமலையடிகள் அங்ஙனம் தமிழர்களாற் செய்து சேர்க்கப்பட்ட "மூன்று பதிகங்களிலும் குறிக்கப்பட்ட உருத்திரர் கையில்வில்லும் அம்பும் வைத்திருப்பவராகவும் கொடியவராகவும், வெந்த பன்றியைப்போல் அழித்தலைச் செய்பவராகவும், மருந்துகளைக் கையில்வைத்திருப்பவராகவும் பெரும்பாலும் சொல்லப்பட்டிருக்கிறார்" என்கின்றனரே இதனால் அடிகள் முன்னை இழுக்கமுறக்கூறியவராகாரா? தமிழர்கள் அன்புருவாகிய சிவத்தின் மீது பதிகஞ்செய்து சேர்க்காதுவிட்டதேனோ? இனி இருக்குமாமறையிற் றமிழர்கள் பதிகஞ்செய்து சேர்த்தார்களென்பதற்கு அடிகளுடைய சொல்லை விடப் பிறிதோராவது ஆதாரமுண்டா?

ஆசிரியன்:—குழந்தாய், அச்சந்தைத்தருகின்ற உருத்திரமூர்த்தியைத் தமிழர்கள் பாடினார்களென்றுரைப்பது தமிழர்களுக்கு விழுப்பமாமேயன்றி யிழுக்கமாகாது. எம்மிறைவனுக்குப் போகருபமுமுண்டு கோரருபமுமுண்டு. இது வேதசிவாகமங்களுக்கு ஒப்பமுடிந்த முடிபு. உடற்பற்றுடையார் உலக சுகாநுபவங்களை விரும்பிநிற்பர் இறைவனுடைய போகருபத்தைத் துதிப்பர். பிறவிப்பிணியைக்களைதல்வேண்டி 'மற்றுந்தொடர்ப்பாடெவன்கொல், பிறப்பறுக்கலுற்றார்க் குடம்புமிகை' யெனத்துறவொழுக்கம் மேற்கொண்டு கருமவிர்த்திசெய்யும் அறிவுடையோர் திருவாலங்காட்டிற் காட்சிதந்தருளிய

திருவுருவத்தைத் தியானிப்பர். உருத்திரபூமியாகிய மயானத்திலே யோகினிகளும் டாகினிகளும் பூதகணங்களும் புடைசூழக் கையிற் பிரமகபாலமேந்திச் செக்கர்வானிறத்த திருமேனியில் வெண்ணிறமாகிய பஸ்மத்தை யுத்தூளித்து அங்கிருந்து அந்திப்பொழுதில் அனலிடையே யாடுகின்ற எங்களப்பனது திருவுருவம் ஐம்புலவலைப்பட்டார்க்குப் பேரச்சத்தை விளைப்பிக்கினும் துறவொழுக்கத்தினின்றார்க்குக் கழிபேருவகையைப் பயப்பதாம். இத்திருவுருவத்தைத் தரித்த காரைக்காலம்மையார் அதனியல்பை வெளிக்கூறிய திருப்பதிகங்களையும், சைவம், காபாலம், பாசுபதம், மாவிரதம் எனப்படும் உட்சமயங்களுக்குரிய ஆகமங்கள் தலைவனியல்பைக் கூறுமாற்றத்தையும் ஆராய்ந்தறிவாயாக. இனிச் சங்காரகருத்தனே தலைவனென ஆகமங்களனைத்துங் கூறுகின்றன. உருத்திரமூர்த்தியினுடைய கையிலிருக்கும் வில்லும் அம்பும் மும்மலகாரியமாகிய உடலோடியைந்த தொடர்பினை நீக்கவேற்பட்டன.

"அப்பணி செஞ்சடை யாதிபுராதனன்
முப்புரஞ் செற்றனனென்பர்கண் மூடர்கள்
முப்புரமாவது மும்மல காரியம்
அப்புற மெய்ததையாரறிவாரே"

என்னுந் திருமந்திரப் பொருளை நோக்குக. இறைவனுடைய கையிலிருக்கும் மழு பிறவிநோய்தீர்க்கு மருந்தாமெனஅறிந்துகொள்ளுவாய். இனி, மனம், வாக்கு, காயங்களால் அறிந்தும் அறியாமலும் செய்தபாவங்களினின்று நீங்கிக் கொள்வதற்குப் பஞ்சமந்திரங்களுள்ளே அகோரமந்திரத்தைச் செபித்தல் வேண்டுமென்று ஆகமநூல் விதித்திருப்பதை நுணுக நோக்குவாயாக. இவற்றைச் சிந்திப்பாயாயின் உருத்திரமூர்த்தியினுடைய பேரும் சிறப்பை யுணர்ந்து கொள்வாய்.

மா.—உருத்திரதியானஞ் சிறந்ததெனெ உணர்ந்துகொண்டேன். மலவிருளை நீக்குங் கழிபெருஞ் சிறப்பினதாகிய உருத்திர வழிபாட்டை ஆரிய மக்கள் தமிழர்களிடமிருந்து உணர்ந்து கொண்டார்களென்பதற்கு ஆதார முண்டா?

கு:—மறைமலையடிகள் ஏதாவது ஆதாரங்காட்டுகிறாரா?

மா:—இல்லை. இருக்குமறையிலுள்ள உருத்திரவழிபாட்டுப் பதிகங்களைத் தமிழர்கள் செய்துசேர்த்தார்கள் என்று ஆதாரமற்ற வெற்றுரை கூறுகிறார். பின்னர்த் தாங்கூறிய வெற்றுரையை யாதாரமாக்கி இருக்கிலிவ்வாதது யசுரிலிருத்தல் கூடாது என்றும் பிரமாணமொன்று காட்டிச் சதருத்திரீயம் இடைச்செருகல் என்கிறார்.

ஆ:—இருக்குமாமறையிலுள்ள உருத்திரவழிபாட்டுப் பதிகங்களெல்லாம் இந்திரன், மாருதர், அக்கினி, சூரியன், விஷ்ணு, சந்திரன் என்றின்னோர் மேற் சொல்லப்பட்ட பதிகங்கள் பலவற்றினுள்ளும் உருத்திரமூர்த்தியினது சிறப்பும் தலைமைத்தன்மையும் கூறப்பட்டிருக்கிறபடியால் இருக்குமாமறையில் உருத்திரருடைய சிறப்புக்கூறிய பதிகங்கள் மூன்று நான்கு அல்ல, எத்தனையோபல என்று சொல்லவேண்டியிருக்கிறது. யசுரிலும் அவ்வாறே, சாமவேதத்திலும் அன்னதேயாம், அதர்வம் பெருகக்கூறுவது உருத்திரவழிபாடு என்பதையாருமறிவர். அதர்வசிகை அதர்வசிரசின் வழிவந்த சிவாகமங்களும் வடமொழி நூல்களேயாம். இவற்றுவழிவந்த சைவசித்தாந்த சாஸ்திரங்கள் வேதங்களைப் பிரமாணமாகக் கொண்டன என்பதற்கு அச் சைவசித்தாந்த சாஸ்திரங்களே சான்று பகருகின்றன. சைவசமயத்தை நிலைநிறுத்திய சமயாசாரியர்களனைவரும் வேதத்தைப் பிரமாணநூலாகக் கொண்டார்களென்பது மறுக்கொணு வுண்மையாம். இனிச் சைவாகமங்களும் உருத்திரவழிபாடும் இமயமலைச்சாரலிலுள்ள தேசங்களில் இன்றும் நின்று நிலவுவதைக் கண்கூடாகக் கண்டுகொள்ளலாம். உருத்திரவழிபாட்டை ஆரியர் தமிழரிடமிருந்து பயின்று கொண்டாரென்பதைப் பார்க்கிலும் இந்திரவருண வழிபாடுகளைத் தமிழர்களிடமிருந்து பயின்று கொண்டார்களென்பது பொருத்தமாகும்.

மா:—அஃதெவ்வாறுமென உணர்த்தியருளுக.

ஆ:—தமிழ்மொழித்திணைமரபு என்றுதொட்டு ஏற்பட்டது?

மா:—அது தொன்றுதொட்டு ஏற்பட்டதென்பதற்குத் தமிழிலக்கணமே சான்றாகும்.

ஆ:—தொன்று தொட்டுள்ள திணைமரபில் மருதநிலமக்களும் நெய்தநிலமக்களும் எவ்வெத்தேவர்களை வழிபட்டார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

மா:—இந்திரனையும் வருணனையும் வழிபட்டார்களென்று சொல்லப்பட்டிருக்கிறது.

ஆ:—தமிழ்நாடும் தமிழ்மொழியும் உண்டானகாலத்திலிருந்து வருகிற வழிபாடு பிராரம்பிக்கப்பட்டதென்று சொல்லுவது பொருந்துமா?

மா:—பொருந்தாது.

ஆ:—ஆகவே உருத்திர இந்திர வருண வழிபாடுகள் வடநாட்டுக்கோ தென்னாட்டுக்கோ சிறப்பியல்பாகாது இருபெரு நாட்டுக்கும் பொதுமரபினதாயிருந்ததென்பது பெறப்படுகின்றதல்லவா?

மா:—ஆம், பெறப்படுகின்றது.

கு:—குழந்தாய், நான் சொல்வதை யுற்றுக்கேட்பாயாக. வட நூன்முடிபும் தமிழ்நூன்முடிபும் பொருளால் ஒன்றுபட்டனவே. "அம்மையப் பரே யுலகுக் கம்மையப்பர்" உலகிலுள்ள மக்களனைவரும் எம்பெருமாட்டியினது செல்வக்குழந்தைகள். சிவப்புத்தோலுள்ள மேற்றிசையார் சிலர் கார்வண்ணராகிய ஏனை மக்களைத் தம்மோடு உடன்வைத்து எண்ணுதல் தகாது இழிவாமென வெண்ணி ஆரிய அநாரிய மங்கோலிய நிக்ரோவ வேறுபாடு கூறத்தலைப்பட்டனர். நம்முன்னரும் தமக்கென ஒரு பெருமை யில்லாது குலப்பெருமை பேசும் வன்னெஞ்சர் சிலர் முன்னாளில் அறநெறி திறம்பிய பெரியோராற் செய்தொழில் வேற்றுமைச் சிறப்பு நோக்கி வகுத்த நாற்பெரும் பிரிவினைத் தோன்றத்தாலேற்பட்ட வருணபேதம் எனக் கொண்டு உயர்குடிப்பிறந்தவர்களுக்கு உயர்வு கூறியும் இழிகுடியெனத் தம்மால் ஒதுக்கி வைக்கப்பட்ட குடிகளுட்டோன்றிய மாணிக்கங்களை யவமதித்தும் வருகிறார்கள். இது இறைவனுடைய முன்னிலையில் ஏற்காத செயலாகும். மொழிநூல்வல்லார் வைதிகச் சொற்கள் பலவற்றுக்கும் தனித்தமிழ்ச் சொற்கள் பலவற்றுக்கும் ஒற்றுமைகாட்டுகிறார். இனி, வங்காளி முதலிய வடநாட்டுமொழிகளிலுள்ள சொற்களிற் சரிபாதிக்கு மேற்பட்ட சொற்கள் சம்ஸ்கிருதத்துக் குரித்தாகாதன. பாரதக்கண்டத்தில் மிக மிகப் பூர்வத்தில் வழங்கிய பாகத (பிராகிருத) மொழி வடமொழிக்கும் தென்மொழிக்கும் தாய் மொழியென்று கருதப்படுதல் இனிமேல் வருங்காலத்து ஆராய்ச்சி முடிபு ஆதலுங்கூடும்.

மா:—ஐய, வேதசிவாகமங்களை யீசனுடைய வாக்கு என்கிறார்களே அது எவ்வனமாகும்?

கு:—அருமைமாணவ, வேதசிவாகமங்களை யோதி யுணர்ந்த அறிஞர் வேதமந்திரங்களினது பொருளும் ஒலிவடிவும் வரி வடிவும் காயத்திரி மந்திரத்திலொடுங்குவனவா மெனவும், சிவாகமங்களின் பொருளும் ஒலிவடிவும் வரிவடிவும் பஞ்சாக்கரமந்திரத்திலொடுங்குவனவாமெனவும் இவ்விரு மகா மந்திரங்களும் முழுமுதன்மை பொருந்திய பிரணவ மந்திரத்திலொடுங்குவனவாமெனவும், இப்பிரணவ மந்திரம் இறைவனுடைய வாக்கு எனவுங் கூறுவர். ஆகவே வேதாகமம் இறைவனிடத்திருந்து தோற்றிய தென்பது பெரியோர்கள் கண்டமுடிபாகும்.

மா:—அங்ஙனமாயின் இறைமொழியாகிய வேதத்தில் இந்திரன் முதலிய தேவர்களுக்குத் தலைமை கூறப்பட்டிருக்கிறதே, அஃதெங்ஙனம் பொருத்தமாகும்?

ஆ:—அறியாது வினவினாய், இந்திரன் என்னும் பதம் ஒருவகுப்பினரையுங் குறிக்கும், சிறப்பாக ஒருவனையுங்குறிக்கும். அவ்வண்ணமே உருத்திரன் நாராயணனென்னுஞ் சொற்களும் பொருள் கொள்வன. இந்திர உருத்திர நாராயணப் பதவிபெற்ற சீவர்கள் பலருளர். ஆதியிந்திரன், ஆதியுருத்திரன், ஆதி நாராயணன் என நிற்பவன் ஆதிபரம்பரனாகிய பரமபதியே. இந்திரன், உருத்திரன், நாராயணன் என்னும் பெயர்கள் அநந்தமாகிய அவனது சிறப்பியல்புகளில் ஒவ்வொரு சிறப்பியல்புபற்றி யெழுந்தனவாம். மழைவளம் வேண்டியமக்கள் முழுமுதற்கடவுளை நோக்கி "மேகவாகனனே, விண்ணுறைவேந்தே, மழையை யளித்தருள்க" என்று பிரார்த்தித்தார்கள். கலமேறிக் கடல்கடப்போர் தமக்கு அபாயம் நேரிடாது காத்தருளும்படி முழுமுதற்கடவுளை நோக்கி "கடற்கிறையே, சுறவுக்கொடியோய், எம்மைக் காத்தருள்க" என்று துதித்தார்கள். இப்பொருளைப்பற்றி விரிவாக ஆராய வேண்டுமாயின் ஆரியசமாஜ ஸ்தாபகராகிய தயாநந்தசரஸ்வதி சுவாமிகள் எழுதிய சத்தியார்த்தப்பிரகாசிகை யென்னும் நூலின் முதலதிகாரத்தைப் படிப்பாயாக.

மா:—தயாநந்த சரஸ்வதி சுவாமிகள் தமது கூற்றுக்கு ஆதாரங்காட்டுகிறார்களா?

ஆ.—ஆம். இருக்காதிமறைகளி லிருந்தே பல ஆதாரங்களெடுத்துங் காட்டுகிறார்கள். அவற்றுளொன்று வருமாறு:—

"இந்திரம் மித்ரம் வருணமக்நிம் ஆகுரதோ
திவ்யஸ்ஸ சுபர்ணோ கருத்மாந்
ஏகம் ஸத்விப்ராபகுதா வதந்த்
யக்நிம் யமம் மாதரிஸ்வா நமாகு:"

அவனருளாகிய ஒருவனை அறிஞர்கள் இந்திரன், மித்திரன், வருணன், அக்கினி, திவ்யன், சுபர்ணன், கருத்மான், மாதரிஸ்வன் என்றின்னோரன்ன பெயர்களால் வழங்குகிறார்கள்.

(மேற்காட்டிய மந்திரத்தை ஒருபுடை யொலியொப்புமை யுடைய பொதுவெழுத்துக்களாலெழுதினோம். இதனது சுத்தவுருவத்தையும் இன்னும் பல பிரமாணங்களையும் காண விரும்புவோர் சத்தியார்த்தப் பிரகாசிகையைப்பார்த்துக்கொள்க.)

மா.—ஐய, வேதமந்திரங்களிலே பல விடங்களில் அக்கினிக்குத்துதி கூறி யிருப்பதனால் ஆரியமுன்னோர் அக்கினிவணக்கஞ் செய்தார்களென மேற்றிசைப்பாதிரிமார் சொல்லுகிறார்களே. அது உண்மைதானா?

ஆ:—மெற்றிசைப்பாதிரிமார் என்னதான் சொல்லார்கள். நம் முன்னோர் அக்கினியை வணங்கியதாகவும், நாம் கல்லை வணங்குவதாகவும், தாங்கள்மாத்திரங் கடவுளை வணங்குவதாகவுஞ் சொல்லுவது அன்னோர்க்கியல்பு தானே. அங்கியுங் கல்லும் இலிங்கமாமெனவும் இலிங்கமாகிய கடவுள் அவற்றின் வேறெனவும் நாம் அறிவோம். ஐம்பூதங்களுள் மண் பிரமாவையுந், நீர் நாராயணனையும், தீ உருத்திரனையும், வளி மகேசுரனையும், வான் சதாசிவனையுங் குறிப்பனவாம். திருமுருகாற்றுப்படையிலுள் "ஐவருளொருவனங்கை யேற்ப" என்றவிடத்து "ஐவருளொருவன்" என்றது அக்கினிதேவனையென்று உரைகண்டிருத்தலை நோக்குக.

மா.—அன்பார்ந்த ஐய, இறைவனொருவனே யென்பது ஆரணமுடிபாமென அறிந்துகொண்டேன். எம்பெருமாட்டியாரும் எம்மிறையினின்று வேறல்லளோ?

ஆ:—"முதல்வனொருவனே ஞாயிறுமொளியும் போலச் சிவமுஞ் சத்தியுமெனத் தாதான்மியத்தால் இருதிறப்பட்டுச் சருவவியாபியாய்ப் பொதுமையினிற்பன். ....தன்னை விளக்குவதூஉம விடயங்களை விளக்குவதூஉந் தானேயாகிய ஞாயிறொன்றுதானே. விடயங்களை விளக்குழிக் கதிரெனவுந் தன்னைவிளக்குழிக் கதிரோனெனவுந் தாதான்மியத்தால் இருதிறப்பட் டியைந்து நிற்றல்போல புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய்த்தன்னியல்பி னிற்பதூஉம் புறப்பொருளைநோக்கி யுணர்த்துவதூஉமாகிய இருதன்மையுடைய பேரறிவாய சைதன்னியமொன்றே அங்ஙனம் புறப்பொருளைநோக்கிநிற்கு நிலையிற் சத்தியெனவும் புறப்பொருளை நோக்காது அறிவுமாத்திரையாய் நிற்குநிலையில் சிவமெனவுந் தாதான்மியத்தால் இருதிறப்பட்டியைந்து நிற்குமென வுணர்க.

இனித் தீயின் சத்தியொன்றுதானே சுடுதல் அடுதல் முதலிய தொழில் வேறுபாட்டால் சுடுஞ் சத்தி அடுஞ்சத்தி யென்றற் றொடக்கத்துப் பலவேறு வகைப்படுமாறுபோல, சிவசத்தியொன்றே காரியவேறுபாட்டால் பரை, ஆதி, இச்சை, ஞானம், கிரியையென்று ஐவகைச் சத்திகளாயும், முறையே ஐந்தும் நான்கும் எட்டும் பதின்மூன்றும் எட்டுமாகிய கூறுபாடுடைய ஈசானி முதலிய ஐவகைச்சத்திகளாயும், ஆரணி செனனி முதலிய மூவகைச்சத்திகளாயும் நிவிர்த்தி பிரதிட்டை முதலிய ஐவகைச்சத்திகளாயும், வாமை, சேட்டை முதலிய அட்டசத்திகளாயும், பராவாகீசுவரி, அபராவாகீசுவரி, மனோன்மணி, மகேசை, உமை, திரு, வாணியென எழுவகைச் சிவபேதங் கட்கும் முறையே எழுவகைச் சத்திகளாயும், அந்தியான்மக மெனப்படும் உன்மனை சமனை முதலிய கலைகளாயும், இன்னும் பலவேறுவகைப்பட்டுநிற்கும். அவ்வச்சத்திகளோடு புணர்ந்த சிவமும் அவ்வாறே பலவகைப் பெயர்பெற்று நிற்கும்.

—சிவஞானபோதம், ௨ம் சூத்திரவுரை.

மா:—கடவுளொருவரேயென்பது வேதசிவாகமங்களுக்கு ஒப்பமுடிந்த முடிபுஎனபதையுணர்ந்துகொண்டேன். வேதசிவாகமங்களுக்கு வேற்றுமை கூறுவோர் வேதம் பொருள்ஒன்று என்றது, சிவாகமம் மூன்று என்றது என்று வேறுபாடுகாட்டுகிறார்களே.

ஆ:—அநுபவநிலைக்கேற்றபடி ஒன்றென்றும், மூன்றென்றும் ஆறென்றும் பலவென்றும் சொல்லலாகும். வேற்றுமைகண்டவர்களுடைய கூற்றையுரைத்தனை; ஒற்றுமைகண்டவர்களுடைய கூற்றையுங்கேட்பாயாக.

"ஒன்றென்ற தொன்றேகா ணொன்றே பதிபசுவா
மொன்றென்ற நீபாசத் தோடேகா—ணொன்றின்று
லக்கரங்க ளின்று மகரவுயி ரின்றே
லிக்கிரமத் தென்னு மிருக்கு." —ஸ்ரீமெய்கண்ட சிவாசாரியார்.

"பூண்ட டியான முதிர்ச்சியினாற் பூதலுந்தன்னை யறமறந்து
மாண்டா னன்றோ சிவோஹமென வழுந்தற்குரியா னதுவரையும்
ஆண்டா னடிமைத் திறம்கன்று.—ஸ்ரீராமகிருஷ்ணபரமஹம்சதேவர்.

"சந்ததமு மெனதுசெய லினதுசெய லியானெனுந்
தன்மையினை யன்றியில்லாத்
தன்மையால் வேறலேன் வேதாந்த சித்தாந்த
சமாச சுபாவ மிதுவே." —ஸ்ரீதாயுமானசுவாமிகள்.

மேலும் தபாநந்தசரஸ்வதி சுவாமிகள் தமது சத்தியார்த்தப்பிரகாசிகையிலே வேதப்பிரமாணங்கொண்டு முப்பொருளுண்மையை விளக்கியிருக்கிறார். அதனையுங் கண்டறிவாயாக.

மா:—ஐயா, இன்னும் ஒருசந்தேகம். உண்மைப்பொருளைக்கூறவந்தெழுந்தவேதம் இம்மைப்பயனையும் இந்திரன் முதலிய இறையவர் பதங்களையுந் தருகிற அசுவமேதாதியாகங்களைக் கூறியகாரணமென்னை.?

ஆ.—நன்குவினவினாய். வேதமானது அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கினையுங்கூறும் பொதுநூல். ஆகமம் வீட்டினை மாத்திரங் கூறுஞ் சிறப்புநூல். (சிறப்பு என்றால் உயர்வுஎன்பதல்ல, பலதிறப்பட்ட பொருளுள் ஒருதிறப்பொருளைக் கூறுவதென்பது.) இனி, வீட்டுநெறிக் குரிய சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்குபாதங்களுள்ளும் ஞானபாதத்தைப்பெருகக் கூறுகிற சிவஞானபோதம் சிறப்பினுட்சிறப்பு. சிறப்புநூல் பொதுநூலினுள் அடங்கியிருப்பது. நாற்பொருளினையும் காதலித்தோர் வேதநூல்வழி நிற்பர். வேதத்திலில்லாத வித்தையில்லையென்பர்.

விட்டின்பத்தை விழைவோர் வேதசிரசாகிய உபநிடதங்களையும் சிவாகமங்களையுமோதி அவற்றுவழி நிற்பர். வேதநான்முடிபும் சிவாகமநான்முடிபும் ஒன்றெனவறிந்தமையானன்றே நீலகண்ட சிவாசாரியார் "வேதசிவாகமங்களுக்குப் பேதங்காண்கின்றிலம்; வேதமே சிவாகமம்" என அருளிச்செய்தார். மாணவக, இன்னு மொன்று கேட்பாயாக. ஆன்மாக்களது புத்தியானது நிச்சயமில்லா நிலைமைத்தாதலால் ஏதேனு மொருநூலை முற்றுண பிரமாணநூலாகக்கொள்ளவேண்டும். அங்ஙனம் பிரமாணமாகக்கொண்ட நூலைப் பூரணமாகக் கொள்ளுதல்வேண்டும். அதாவது இன்னபாகத்தைக் கொள்வேன் இதனைத்தள்ளுவேன் என நிலையில்லாப்புத்திகொண்டு நிச்சயித்தல் கூடாது. ஆதலால் வேதம் பிரமாணநூலாகாதுஎன்று சொல்பவர் வடமொழியிலாவது தமிழ்மொழியிலாவது மற்றொருநூலைப் பிரமாணமாகக் கொள்ளவேண்டும். அங்ஙனங்கொண்ட அந்நூல் வேதம் பிரமாண நூலென்று சொல்லுமாயின் மற்றொருபேச்சின்றி வேதத்தைப் பிரமாணமாகக்கொள்ளவேண்டியது அன்னார்மேற்பொருந்தடைதும்.

குளிக்கப்போய்ச் சேறாடல்.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை
பண்டிதை சு. பாலாம்பிகை அம்மாள் எழுதியது.

அகில வேதமு மாகம பேதமு நம்மைச்
சகல சிவ தயாபர னென்றுரை சால்பா
லிகலில் சேதன மசேதன மாகிய விரண்டும்
புகலில் வேறல வெமக்கவை பொதுமைய வதனால்.

—திருவிளையாடற்புராணம்.

மதுராபுரியை யரசாட்சிசெய்துவந்த பாண்டியர்களுள் ஒருவனான இராசராசனென்பான் வேட்டையாடும் விருப்பினாற் றன்னகரத்திற் கணித்தாயுள்ளவோர் காட்டகம்புக்கான். அவன்வருகையை யறிந்தவோர் பன்றியானது அவனை யெதிர்த்துக் கொல்லுவான் சென்றது. அப்பன்றி, அரசன் கொடுங்கணைகளாற் றாக்குண்டு தன்னுயிரை நீத்தது. இப்பால் அதன் பெண்பன்றியும் அவ்வரசனாற்கொல்லப்பட்டது. அதற்கனேகம் இளங்குட்

டிகளிருந்தன. அவை தம் தாயிறந்த சோகத்தினாலும். வெயில், பசி, தாகம் முதலியவற்றாலும் வாடி போராதரவுமின்றி யலைந்தன. சர்வசிவதயாபரனுன சோமசுந்தரப்பெருமான் இதைக்கண்டு தரியாது தாய்ப்பன்றியினுருவெடுத் தவைகளைக்காத்தருளினர். இதை யறிந்த லோகநாயகியாராகிய உமாதேவியார் உலகத்திலே தோன்றிய விலங்குகளியாவினுள்ளும் பன்றியானது மிகவும் அருவருக்கத்தக்கதும் இழிவானது மன்றோ? இப்படிப்பட்ட மிருகத்தின் வடிவெடுத்துச்சேறல் பரம்பொருளாகிய உமக்குத் தகுமோவென வினவினர். அநாதிமலமுத்தராகிய பரமசிவன், "ஒருவன் தன் உடம்பின் கூறுகளனைத்தையுமொரேவிதமாகப் பாதுகாக்கிறான்; அதுபோலவே சகலபுவனங்களும் அவற்றிலுள்ள சரம், அசரமாகிய இருவகை ஆன்மராசிகளும் நமதங்கங்களாகும்; அவைகளை ரட்சித்தல் நமது கடனு"மென விடையிறுத்தனர்.

இன்னனம் பசுக்களியாவையும் பரமேஸ்வரன் தமதங்கங்களாகத்திருவுளங்கொண்டுள்ளார். அவர் மக்களாகிய நம்மினுங்குறைந்த அறிவுள்ள விலங்கு, புள் முதலியவைகளிற் ற னருள்நனியுடையர். என்னை, ஒருதாய்க்கு நான்கு புதல்வருளரெனின் அவருள் இளையான் ஒரு மூங்கையெனின் அவனன்னை எனைபோருள் அவன் மீது பேரன்புபாராட்டுவள். அன்றியும் தன் மற்றைப்பிள்ளைகளையும் அவனுக்கு உதவிபுரியும்படி கேட்பள். எனெனில் அவன் வாய்பேசமாட்டான். அன்றியுந் தனக்காக வேண்டியவைகளைச் செய்யமாட்டான். அதுபோலவே சிவபெருமானும் உதவியற்ற அநாதைகள்பாற் பெருங் கருணைபாலிப்பர். அக்காரணம்பற்றியன்றோ அவருக்கு அநாதைரட்சகரென் றொரு திருநாமமுண்டு.

முற்காலத்திலுள்ள மன்னர்களுந் தங்களா லாம்வரையும் மற்றையுயிர்களைக் காப்பாற்றிவந்தனர். மன்னர் மன்னனுகிய மநுநீதி கண்ட சோழனென்பான் தன்கன்றையிழந்த ஓர் பசு கொண்ட பரிதாபத்தைக் கண்டு சகிக்கலாற்றாது தானும் பசுவைப் போற்றிய செய்த வினைந்து அமைச்சர் தடுத்தபோதும் அவ்வுரை கொள்ளாது தன் னருமை வாய்ந்த ஏக புத்திரனைத் தேர்ச் சக்கரத்தால் நெரித்துக் கொன்றான்.

சிபிச்சக்கிரவர்த்தி யானவர் ஒரு புறாவினிமித்தம் தம்முடம்பிலிருந்த தசையை வெட்டிக் கொடுத்து அதற்குயி ரளித்தனர். மேற்கூறியபடி ஆதியந்தமில்லாத பரமசிவன்முதல் மக்களீறாயுள்ள யாவரும் தாழ்ந்த வுயிர்கட்கு வருந் துன்பொழிக் கவைகளைப் பரிபாலித்து வந்தனர்.

இவர்களைப் போலவே நாமும் மற்றைப் பிராணிகட்கு வரு மிடுக்கண் களைந்து அவைகட்குத் துணைசெய்தல் நம்பெருங் கடனாம். அப்படிச் செய்யாவிடின் கடவுள் நம்மைத் தண்டிப்பார். பிற வுயிர்க்கு நன்மை செய்யாதிருத்தல் பாவமென்றே நூல்களுங்கூறு கின்றன. தற்காலத்திலுள்ள நம்மவர் மக்கட் கின்றியமையாத இரக்கம், நீதி முதலிய குணங்களைப்போக்கி மறநெறி கைக்கொண்டு ஆடு, கோழி, புறா, கொக்குமுதலியனவைகளைக் கொன்று புசிக்கின் றனர். காத்தலே நம்கடனாக அவைகளைபழித்தல் எத்துணைப் பெரும்பாதகம். அவைகளுடைய கொலையைப்பற்றி விசாரணை செய்வதற் கொருவருமில்லையே. இப்போழ்து ஒருவனை ஒருவன் கொன்றால் அரசாட்சியாரால் விசாரணை செய்யப்பட்டுக் கொன்ற வன் கொல்லப்படுவான். வாய்பேசமாட்டாத ஏழைப்பிராணி களாகிய ஆடு, கோழிகளைக் காக்கும் அரசில்லையே!

நீதியற்ற அசுரப்பெண்ணாகிய அசமுகியென்பாள் வீரமாகா ளருடன் யுத்தஞ்செய்த சமயத்தில் அவருடைய வாள் சிதறிப்போ யிற்று. அதைக்கண்டு நங்கை நிராயுதனுடன் சமர்செய்தல்தகா தெனப் போரை நிறுத்தினள். அசுரமாதாயிருந்தும் அவளுடைய இருதயத்தில் மநுநீதிதோன்றிற்று. நம்மவரோ டொப்பிடின் ஆடு, கோழிகள் நிராயுதர்தாமே. இயல்பாகவே இரக்கம் முதலிய நற் குணங்கட் குறைவிடமா யிருக்கவேண்டியமனம்கொலைக்குறை விடமாயிருப்பின் யாது செய்வது? "பொருளாட்சிபோற்றாதார்க் கில்லை யருளாட்சி யாங்கில்லை யூன்றின்பவர்க்கு" என்று திருவள்ளு வர் வற்புறுத்தியிருக்கிறார். உலகத்திலே உடன்பிறப்பாற் சகோதர முறைகொண்டாடப்பட்டுவருகின்றது. ஆன்மாக்க ளெல்லாஞ் சிவன் சந்நிதியினின்றும்தோன்றுகின்றன. ஓரேவிடத்து உதித்து வருகின்றமையால் ஆன்மாக்களொன்றற்கொன்று சகோதர முறை பாராட்டத்தக்கவை. ஆடு, கோழிகளும் நம்சகோதரர்களே.

கொலையானது பாதகங்கட மூநங்களினுத்தானும் தள்ளப்பட்டுள்ளது. எல்லாச்சமயங்களிலும் தனிசிறந்து விளங்குஞ் சைவ மதத்தினரும் தற்சமய மதைச் சிறப்பாகக் கொண்டுள்ளார். "தாம் வளர்த்ததோர் நச்சுமாமரமாயினும் கொலா" ரென மாணிக்கவாசக சுவாமிகள் பொதுமக்களிலக்கணங் கூறினர். அதற்கு முழுமாறாக நம்மவருட் சிலர் தங்களுணவிற்குப் பயன்படும் மிருகங்களைக் குழந்தைப் பருவத்திற் றங்கள்பிள்ளைகளைப்போ லுணவூட்டி வளர்க்கின்றனர். அவைகள் யௌவனதசை யடைந்தவுடன் உணவிட்டகையே வாளுடன்வரும். அதைக்கண் டம்மிருகங்கள் செய்வதறியாது மபங்கிச் சுழன்று மரணத்தறுவாயிலிருக்கும். அவைகள் படும்பாட்டைக் கண்டேனு மப்பாதகர் கன்னெஞ்சுருகுமா? தங்களெண்ணத்தை நிறைவேற்றி மனைவி, மக்களுடனுண்டு ஆனந்தத்துடன் குலாவித்திரிவர். மக்களெனப்படுவோர் தாம்வளர்த்த மரங்களைத்தானுங்கொல்லார். ஆனமையால் சரவுயிராகிய ஆடு, கோழிகளை வெட்டுபவர் மக்களல்லர். சிலர் நாங்கள் கொல்லவில்லையெனவும் விலைக்குக்கொண் டுண்கின்றோமெனவுந் தங்கட் கதனுலொரு கெடுதியுமில்லையெனவுங் கூறுவர்.

"தினற்பொருட்டாற் கொல்லாதுலகெனின்யாரும் விலைப்பொருட்டா லூன் றருவாரில்" என்றார் திருவள்ளுவரும். மாமிசபோசனத்திலுள்ள வாஞ்சையே யிப்படிப் பிதற்றுவதற்குக் காரணமாகும். உயிர்களைக் கொன்றருந்தினல் நாம் மீளாத எரிவாய் நிரயத்தில் விழுந்தழுந்துவோமெனமேலோர் கூறினர்.

நம்மவர் சிவநிசி, சோமவாரம், பிரதோஷம், புராணபடனம் முதலிய புண்ணியகாலங்களிலேயே சிவசந்நிதிக்குச்சென்று அவரைக்கண்களிக்கக்கண்டு சேவித்தற் பொருட்டன்றோ தாங்கள் புலால் சமைத்தபாத்திரங்களைப் புறக்கோடியிலெறிந்துவிட்டுத் தங்களையுந் தங்களில்லங்களையும் புனிதமாக்குகின்றனர். இங்ஙனஞ் செய்பவர் தெய்வத்திற்குப் பலியிடுகிறோமென்று ஆடுகோழிகளை வெட்டி ஏன் ஆலயவாயிலைப் பிணக்களமாக்குகின்றார்? மக்களுடைய இருக்கைகளேற்க வொண்ணாத கொலையைத் தேவகோட்ட மேற்குமென்றோ நினைக்கிறார். அன்றியும் மனிதருடைய பிணங்

கள் கோயில்வீதிவழிச் செல்லி னக்குற்றத்திற்காகப் பிராயச்சித்தஞ் செய்வார்கள். மேலான மனிதருடைய பிணங்களே யிவ்வளவு மாசுடையதெனின், இழிவானதெனக் கருதப்படுகிற மிருகங்களுடைய பிணங்க ளெவ்வளவு குற்றமுடைத்தாயிருக்கும்! இவற்றை யென்னுறு பலியிடுதலெவ்வளவு மடமை. சிலர் தங்களுக்குத் தெய்வம் பலியிடும்படி கனவிற் கட்டளையிட்ட தெனவும் புகல்வர். மனதிலுள்ள எண்ணங்களே பெரும்பாலும் கனவிற்றோன்றும். ஒருவன் தான் கோவிலில் ஆடுவெட்டிலெனக் கிக்காரியஞ் சித்தியாகுமென் றெண்ணுவானாகில் அதே அவன் கனவிலொருவர் சொல்லுவதாகத் தோன்றுவதன்றி அது உண்மையன்று. தெவத்திற்குப் பலிகொடுத்தொருவன் வரங்கேட்டல் ஓரரசனுடைய பாலகனை யவன் முன்னிலையிற் கொன்று அவனிடம் ஓர் உத்தியோகங்கேட்டற் கொப்பாகுமல்லவா? எனெனில் எல்லாவுயிர்களும் பரமசிவனுடைய பிள்ளைகள்; அவருடையபிள்ளைகளை அவர் முன்னிலையில் வெட்டினாலவர் சகிப்பாரா? அதிக தண்டனையே புரிவார். கொலையிலக்கில்லாத கிறிஸ்தவர்களு மிவ்வாறாகத் தங்க ளாலயங்களிற் கொலைசெய்வதில்லை. நாம் பிறவுயிர்க் குதவி புரியா திருத்தல் பாவம்; அவைகளைக் கொல்லுதல் பெரும்பாவம்; கோயிலில் வெட்டுத லின்னும் பெரும்பாதகம்; ஆலயத்தை அசுத்தப்படுத்துவதிலும் பெரும்பாதகம்; தெய்வத்திற்குப் பிரீதியாகுமென நினைத்துச் செய்த லாமிறந்த பாவமாம். நம்மவரிங்ஙனம் தெய்வத்திடம் வரம்பெறச் சென்று அளவில்லாத பாவத்தைப் புரிதல் குளிக்கப்போய்ச் சேறு பூசினதற் கொப்பாகும்.

ஒருவன் தன்னைத் தான் பலி செய்யலாம். அசுர நாதனா சூரனென்பான் தான்செய்த வேள்விகளில் மிருகங்களைப் பலி கொடுத்தான். கொடுத்தபடியால், பரமசிவன் அவனுக்குப் பிரசன்னமாகவில்லை. தன்னுடம்பை வெட்டிப்போட்டபின்பே அவர் அவனுக்குப் பிரசன்னமானார். அவன் பின்னோனாகிய சிங்கனென்பான் தன்னை வெட்டிப் பலியிட்ட வலிமையினாலன்றோ குமரக் கடவுளுடைய பாணங்களாலறுபட்ட உறுப்புக்கள் மீட்டுமவ்வண்ணந் தோன்றின. ஆனமையாலொருவன் தன்னைப்பலிசெய்தால் நற்பயனடைவான்.

"உண்மைத்தெய்வம் உயிர்ப்பலி வாங்கா"
"சிவவதையே சிவவதையாகும்"
"கொலைப்பழியால் குலங்கள் நசித்திடும்"
"வதை செய்வதால் வளர்ந்திடும் பிணிகள்"
"கொலைசெய்த கன்மமே குஷ்டமாய் விளைவது"

எனவே அறநெறிபிடித்து, பிற உயிர்காத்து, குல முறை விளங்க, பலிதனைமாற்றி, பால்பழங்கொண்டு, பலவாய பூசை பண்பாய்ச் செய்து, பவப்பிணியொழித்து, மானிடப்பேற்றின் செய்கடன் தீர்ப்பதே பாரதநாட்டின் பழம் பெருங் கொள்கை சுபம்! சுபம்!! சுபம்!!

"அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
யிம்மா னுடரெல்லா மின்புற் றிருக்கின்று
ரம்மா வெனுஞ்சத்தங் கேட்டகன்ற மாதவர்க்கும்
பொய்ம்மா நிரயமென்றூற் புசித்தவர்க்கென் சொல்லுவதே.

அ. வேங்கடாசலமுதலியார்.
ஆயுர்வேதவைத்தியர் திருவண்ணாமலை.

பரணிகள்.

அரும் பெருங் கல்விப்புலமை வாய்ந்த பெரியார் ஆய்ந்தெடுத்து "நால்வகை தொண்ணூற்றாறு" எனப் பாகுபாடு செய்தனர் என்பது அறிஞர் பலரும் அறிந்ததொரு பொருளாம். அவற்றுள் பரணி என்பதும் ஒன்றாம்.

"ஆனை யாயிர மமரிடை வென்ற
மான வனுக்கு வகுப்பது பரணி" என்றும்,

"கடவுள் வாழ்த்து கடைதிறப் புரைத்தல்
கடும்பாலை கூறல் கொடுங்காளி கோட்டங்
கடிகண முரைத்தல் காளிக் கதிசொல
லடிபேய்க் கவுள்சொல் லதனாற் றலைவன்

வண்புகழுரைத்த வெண்புறத் திணையுற
வீட்ட லகிளம் வேட்ட லிவைமே
லறவடி முதலா வடியிரண் டாக
வுளமகிழ் பரணி யுரைக்கப் படுமே'' என்றும்

கூறுவர் பாட்டியலுடைய தியாகராய தேசிகர். பாடுவது "கேட்டோர் உள்ளம் மகிழ்ச்சிகூடிப் பெரும்புலவரால் உரைக்கப்படும் பரணி'' என்றும், "பாட்டுடைத் தலைமகனைச் சிறப்பித்தலும் அவன் எடுத்துச்செலவு முறையும் மேல் புறத்திணையிற் கூறிய முறையே செருமுடித்தலும் கூழட்டலும் முதலாயின வெல்லாஞ் சொல்லப்படும்'' என்றும் உரையிற்கண்டார்.

பாணியென்பது பரணி யென்றாயிற்றோ வென்றும், பரணி கொண்டார் தாணி யாள்வார் என்பது பெரும் வழக்காயிருப்பதோடு கண்கூடா யிருப்பதாலும் பரணிநாட் பெயரே நூலுக்காயிற்றோ என்றும் ஐயுற்றோர் ஒருசிலராவர். தேன்மொழி போன்ற தேன்மொழிகளுள் ஒருசில இடுகுறியாகப் பல காரணங்கொண்டு காரியப்பட்டுப் பேராய் நிற்றலின் பரணியெனு நாட்பெயரே நூலுக்காயிற்றென்று கொள்ளுதலே வலியுடைத் தென்க.

அஃதெவ்வாறாயினுமாகுக. அமரிடைத் தனக்கு ஒப்பாரொருவனுமில்லையென வெற்றி வாகை சூடியவனுக்கே பரணி பாடுவது என்பதில் ஐயமின்று. ஆகவே, இப்பொழுது பெருவழக்கிலுள்ளது கலிங்கத்துப் பரணி யொன்றேயாம். பாவதைப் பரணி தக்கயாகப் பரணி போன்ற நூல்களைக் கேட்கின்றோமே யன்றி நூல்கள் வெளியாகிப் பலர்க்கும் பயன்பட்டபாடில்லை. அரசர்கள்மேற் பாடிய பரணிகளுள் பழயனவாக இக் கலிங்கத்துப் பரணி யொன்றே கண்டாம். ஆயினும், பழம் நூல்களை யாராய்வோமாயின் கொப்பத்துப்பரணி கூடல் சங்கமத்துப் பரணி போன்ற பல பரணிகள் இருந்தனவென்று அறிகிறோம். அவைகள் இருந்தன வென்பதற்குற்ற வாதாரங்களாவன:—

கொலையானை—பப்பத்தொரு பசிப்பேய்பற்ற வோர்பரணி
கொப்பத்தொரு களிற்றாற் கொண்டகோன். —ராஜராஜ தேவருலா.
நல்யானை—ஒன்றுபது பிணிப்பக் கொப்பத்தொரு தடக்கைக்
குன்றுயிரம் பண்டுகொண் டோனும். —சங்கர சோழனுலா.

இவன் கி. பி. ௧௦௫௩-முதல் அரசாண்ட இரண்டாம் ராஜ ராஜனென முடிசூடிய ராஜேந்திரதேவனுவான். இவன் இவ்வாறு கொப்பத்து வென்றானென்பது இவன் காலத்துக் கல்வெட்டுக ளால் நன்கு வலியுறுகின்றது.

வெப்பொருவப்—பாடவரிய பரணிபக் கட்டணிவிழ
கூடலார் சங்கமத்துக் கொண்டகோன். —ராஜராஜதேவருலா.
காப்பணக்—கூடலார் சங்கமத்துக் குஞ்சரம் பல்கோடி
யாடலம் பொற்பரணிக் கட்டோனும். —சங்கரசோழனுலா.

என்னும் அடிகளால் தெளியப்பெறும். இவன் வீரசோ ழன், வீரநாராயணன் கரிகாலன் எனப்பெயர்கள் பலவுடைய வீர ராஜேந்திர தேவனுவான். இவனுடைய கல்வெட்டுக்களினின்றும் இவன் நீதிவழுவா நெறிமுறை யுடையானென்பதோடு பெரும் வீரன் என்பதும் நன்கு வெளியாகிறது. இப்பரணிகள் இப் பொழுதும் புலவர் பலர் வீட்டிலிருக்கக்கூடும். அவைகளைத்தேடி யெடுக்க வேண்டியது கற்றறிந்தார் கடனுகையான் இச்சிறு உரை நடையை வெளியிட்டேன். இதுவேபோன்று அறிவாளிகள் பலர் முன்வந்து தமிழ்நாட்டில் இன்னின்ன நூல்கள் இருந்தனவென்று வது வெளியிடுவார்களாயின் யான் மட்டுமல்ல தமிழுலகே அவர்க ளுக்கு நன்றி பாராட்டக் கடைப்பாடுடையதாம்.

இலக்கண விளக்க பரம்பரை
திருவாரூர், சோமசுந்தர தேசிகன்.

ஸத்ய புத்ரர்கள்.

தஞ்சை, தி. நா. சுப்பிரமணியம் அவர்கள் எழுதியது.

மகதநாட்டு அசோக மன்னர் தான் அனுப்பிய புத்த மதப் பிரசாரகர்கள் "சோட, பாம்டிய, ஸதிய புத்ர, கேரள புத்ர" முதலிய இடங்களுக்குச் சென்றார்கள் எனக் கூறுகின்றார்

* 'சோட, பாம்டிய, கேரள புத்ர' ஆகிய மூன்றும், தமிழ் நாட்டு முடியுடை வேந்தர் மூவர்களையும் குறிக்கின்றன வென்பதை நாம் கூறவேண்டுவதில்லை. ஆனால், ஸதிய புத்ர எனக்கூறப்படுபவர் யார் ?

இது விஷயமாய் ஆராய்ந்த ஆசிரியர் பலரும் பலவிதமாக அபிப்பிராயப்படுகிறார்கள். ஸ்ரீமான் K. P. ஜயஸ்வால் அவர்கள் ஹைதராபாத் ஸமஸ்தானத்து பைதான் (Paithan) என்னும் ப்ரதிஷ்டான புரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்த சாதவாகனர்களாக இருக்கக்கூடும் எனக்கூறுகின்றார். (Journal of the Bihar and Orissa Research Society, Vol III, p. 442 n.) ஆனால், அசோகர் அவர்களை வேறாக 'ஆந்திரர்கள்' எனக்கூறுவதை மறந்தனர். காலஞ்சென்ற V. A. ஸ்மித் இரண்டிற்குமுள்ள 'ஸத்ய' என்னும் பகுதியை ஆதாரமாகக் கொண்டு கோயம்புத்தூர் ஜில்லாவிலுள்ள ஸத்யமங்கலம் தாலூகாவாக இருக்கவேண்டும் என எண்ணுகிறார். (Early History of India III Edition p. 185 n.) பூனா நகரத்து 'பண்டர்கார் ஓரியண்டல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட்' தலைவரும் பிரபல வித்துவானுமான ஸர். ராமகிருஷ்ண கோபால பண்டார்கர், மராத்தியர்களுள் ஒரு வகுப்பினராகிய 'ஸாத்புதே' என்பவரை ஸத்யபுத்ரர்களின் ஸந்ததியெனக் கூறி அவர்களை பூனாவிற்குப் பக்கத்தில் வைக்கின்றார். (Indian Review June, 1909) ஆனால், அவர்கள் தமிழர்கள் அல்லவே என்பதை மறந்தனர். தற்காலத்தில் மைசூர் ஸர்வகலாசாலை சங்கத்து இந்துதேசச் சரித்திர உபந்நியாசகராக இருக்கும் ஸ்ரீமான் S. V. வெங்கடேச்வர அய்யர் அவர்கள், தற்காலத்தில் காஞ்சி

---

* அசோகரது இரண்டாம் சாஸனம் பின்வருமாறு கூறுகின்றது:—
"Everywhere in the empire of king Priyadarsin, beloved of the gods, as well as among those nations and princes that are "his neighbours, such as the Chodas, the Pamdiyas, the Satiyaputra, the Keralaputra" Tambapamni, the Yonaking, called Amtiyoka as well as among those who are the Vassel-kings of that Amtiyoka, everywhere king Priyadarsin, beloved of the gods, has founded two kinds of hospitals, both hospitals for men, and hospitals for animals ... ..." அசோகரது, பதின்மூன்று, முதலிய சாஸனங்களும் கூறுகின்றன. (Epigraphia Indica Vol II Buhler's translation.)

புரத்திற்கு 'ஸத்ய வ்ரத க்ஷேத்ரம்' எனப்பெயர் என்பதைக்கூறி, காஞ்சிபுரமாக இருக்கக்கூடும் என்கிறார். ஆனால், அப்பெயர் தொண்டைநாடு முழுவதற்கு மல்லாமல் காஞ்சிபுரத்திலும் ஒரு பாகத்திற்கு மட்டுந்தான் உரித்தானது. ஆனல், அசோகர் கூறியிருப்பதிலிருந்து அப்பெயர் அநேகமாகத் தமிழ் நாட்டையாண்ட ஒருபகுதியினரையோ அல்லது அவர் நாட்டையோ குறிக்கவேண்டும் எனத்தெரிகின்றது. அன்றி, விகுதியாகவுள்ள 'வ்ரத' என்பதும் 'புத்ர' என்பதும் ஒன்றாகாது. (Journal of the Royal Asiatic Society 1918 October)

சென்னை சர்வகலாசாலை சங்கத்துத் தென்னிந்திய சரித்திர உபந்நியாசகராகிய ராவ் சாகிப் டாக்டர் S. கிருஷ்ணசாமி அய்யங்கார் அவர்கள் கன்னட தேசத்துத் துளுவர்களாகவும், மலையாளத்து நாயர்களாகவும் இருக்கவேண்டும் எனக்கூறுகின்றார். "அவர் "ஸதிய" என்பது "கற்புடைப்பெண்டிர் குழந்தை" என்னும் பொருளையுடையது என வாதித்துத் துளுவர்களும் நாயர்களும் சிறப்பாக என்றும் கற்புடையவர்கள் எனக்கூறுகின்றார். ஆனால் 'மாங்கல்யம்' என்பது உயிருடன் இருக்கும் புருஷனைக் குறிக்கும்; கற்பு என்பது அப்புருஷனை ஒட்டி நடத்தலாகும். ஆகவே, அவர்களுக்குக் கைம்பெண் நிலைமை இல்லாமலிருந்தாலும் கூடாததல்ல. இம்முறை கேரள நாட்டிலும் இருக்க, இவர்கள் வேறாகக் கூறப்பட்டிருக்கிறார்கள்." திருவாளர் அய்யங்கார் அவர்கள் அன்னோர் துர்க்கையின் பக்தர்கள் எனவும் கூறுகின்றார். T. R. A. S. 1919 pp. 581-4. அப்படியாயின், ஏன் வங்காளிகள் அங்ஙனம் கூறப்படவில்லை? அன்றி, 'ஸதிய' என்பது 'கற்புடைப் பெண்டிரது குழந்தை' யாயின் 'புத்ர' என்பது வேண்டுவதில்லையே? கடைசியாகத் திருவாளர் K. G. சங்கர அய்யர் அவர்கள் துளுவர்களாகவே இருக்கவேண்டும் என்கிறார். ஏனெனில் அவர்கள் அந்தப் பக்கத்தில் வசித்தார்கள் ஆதலின். (Quarterly Journal of the Mythic Society Vol XI No. 3 p 233)

தமிழ் நிலத்துள்ள நாடுகளோடு "ஸதிய புத்ரர்கள்" கூறப்பட்டிருப்பதால், அவர்கள் இந்நாட்டிலுள்ளவர்களுள் ஒருவராக

இருத்தல் வேண்டும். இதையறியாமலும், அவர்கள் இன்னார் என்பதை நிர்ணயிக்க ஆதாரங்கள் தமிழ்இலக்கியங்களில் ஏதாவது காணப்படுகின்றனவா என்பதை யாராயாமலும், அவரவர்களது கொள்கைகளையே ஸ்தாபிக்க முயலுவதாலேயும் தான் இப்படிப்பட்ட வித்தியாசங்கள் ஆசிரியர்களுக்குள் காணப்படுகின்றன.

அசோகர் வடக்கிலிருந்து தெற்கே வரிசையாகக்கூறியிருக்கின்றார்—கிழக்கே சோழர்களும், பாண்டியர்களும், மேற்கே ஸதிய புத்ரர்களும் கேரளபுத்ரர்களும், பொதுவாக, சோழநாடு தஞ்சை, திரிசிராப்பள்ளி ஜில்லாக்களிலும், பாண்டிய நாடு மதுரை, திருநெல்வேலி, திருவாங்கூர் சமஸ்தானத்து நாஞ்சில்நாடு ஜில்லாக்களிலும் அடங்கியிருந்தது. சேரநாட்டைப்பற்றி இருவித அபிப்பிராயங்கள் இருக்கின்றன. ஆயினும் பொதுவான அபிப்பிராயத்தை எடுத்துக் கொண்டால், அது திருவாங்கூரின் வடபாகத்தையும் கொச்சி சமஸ்தானத்தையும் உள்ளடக்கி இருந்தது. அதற்கு வடக்கேயுள்ளநாடுகள் சில குறுநில மன்னர்களாகிய வேளிர்களால் ஆளப்பட்டு வந்தன.

தமிழ்நாட்டு மேலைக்கடற்கரையின் வடகோடியாகிய துளுநாட்டையும், உவ்நாட்டின் ஒரு பாகமாகிய கொங்குநாட்டையும், "கோசர்" என்னும் வகுப்பினர் ஆண்டு வந்தனரென்பது தமிழ்நாட்டுச் சரித்திரக்காரர்கள் நன்கு அறிந்ததே. சிலப்பதிகாரத்துப்பதிகம்.

"கொங்கிளங்கோசர் தங்கநாட்டகத்து" எனவும், அகநானூறு கடும் பாட்டு,

"மெய்ம்மலி பெரும்பூட் செம்மற்கோசர்,
கொம்மையம் பசுங்காய்க்குடுமி விளைந்த
பாகலார்கைப் பறைக்கட்பீலித்
தோகைக் காவிற் றுளுநாட்டன்ன" (௨-௫)

எனவுங் கூறுகின்றது. அன்றி, அகம். உ௫௩-ம் பாட்டு,

"........................வெல்கொடித்
துனைகாலன்ன புனைதேர்க் கோசர்
தொன்மூதாலத் தரும்பனைப் பொதியில்

விண்ணிசை முரசங் கடிப்பிகுத் திரங்கத்
தெம்முனை சிதைத்த ஞான்றை....." (கூ-௩௦)

எனவும், குறுந்தொகை ௭௩-ம் பாட்டு

" ....நன்ன
னறுமா கொன்று நாட்டிற் போக்கிய
லொன்று மொழிக் கோசர் போல....."

எனவும் பலவாருகக் கூறுகின்றது.

இக்கோசர் எங்கு கூறப்பட்டிருப்பினும், அநேகமாக அடைமொழிகளில்லாமல் கூறப்பட்டிருப்பதில்லை. பெரும்பாலும் அவை கோசரது வாய்மையைப்பற்றியதே யாகும். உதாரணமாக, அகம் ௧௯௬-பாட்டு,

"விடியல் வைகறை யிடூஉ மூர
தொடுகலங் குறுக வாரா றந்தை
கண்கவி னழித்தன் றப்பற் றெறுவர
வொன்றுமொழிக் கோசர்க் கொன்றுமுரண் போகிய
கடுந்தேர்த்திப னழுந்தைக் கொடுங்குழை
யன்னி மிஞிலிய னியறு
நின்னிலத் ததவியை முயங்கிய மார்பே" (எ-௬௨) எனவும்
" வாய்மொழி நிலைஇய சேண்விளங்கு நல்லிசை
வளங்கெழு கோசர் விளங்குபடை நூறி" (அ-௬)

எனவுங் கூறுகின்றன. அன்றி, உ௬உ, ௧௯௬ முதலிய பாக்கள், உண்மையைப் பேசியதற்காக கண்களைப் பிடுங்க வேண்டிய குற்றத்திலிருந்து, ஒரு குற்றவாளி விடுவிக்கப்பட்டான் எனக் கூறுகின்றன. இங்ஙனம் அவர்கள் உண்மையைப் பேசியதன்றி, உண்மையைப் பேசியவர்களிடத்தும் மதிப்புக் கொண்டிருந்தனர் என்பதும் விளங்குகின்றது. தமிழிலக்கியங்கள் பலவாருகக் கூறப்பட்டிருப்பதை நோக்க, அவர்கள் தமிழ்நாட்டுச் சரித்திரத்துள் முடியுடை வேந்தர் மூவரை யடுத்தாப்போல் பெருமை யுள்ளவர்களெனத் தோற்றுகிறது. இவ்விதமாக, அசோக சாஸனத்திய 'ஸதிய புத்ரர்கள்' தமிழ்நாட்டுக் கோசர் எனவே நான் மதிக்கின்றேன்,

கொல்லாமைப் பாக்கள்.

ஆடு முதலிய வுயிர்களின் விண்ணப்பம்.

(அர்விமன் புரிந்தசகாயம் என்ற தேசீயகீர்த்தனை வர்னமெட்டு.)

பல்லவி.

சிவசிவசிவசிவ சிவமே-நாங்கள்
நீட்டுமெனுவுக்கருள் கூட்டுமோதவமே. [சிவசிவ]

சரணங்கள்.

அவமாக எங்கள்குலம் அழிந்திடச் செய்யும்
அறிவிலிகள் முத்தியை அடைந்திட வையும். [சிவசிவ]
சிறுகோயி லதிகாரஞ் செய்தலை நண்ணும்
செல்வர்களுக்குச் சட்ட திட்டங்கள் பண்ணும். [சிவசிவ]
பலவிதமாக எங்கள் பகையாக நடக்கும்
பண்டிகைகளைத் தின்னும் பண்டத்தி லடக்கும் [சிவசிவ]
மதுமாமிசக் கடைகள் மடிந்திட வாட்டும்
மாக்கறிக் கடைகளை மலிவாக நாட்டும். [சிவசிவ]
எளிய வுயிர்களான எங்களைக் கொல்லும்
இருகால் விலங்குகட்கு எற்கவே சொல்லும். [சிவசிவ]

ஆடு முதலிய வுயிர்களின் ஐயவினா.

("யா பந்சநன் பஜாநு" என்ற இந்துஸ்தானி அல்லது
"திருவள்ளூர் வாழுங்கோனே" என்ற வர்ன மெட்டு.)

பல்லவி.

மக்களோ மாக்களோ நீங்கள்- சொல்வீர்
வாய்மையைக் கேட்கின்றோம் நாங்கள் [மக்க]

அநு பல்லவி.

எக்காலமும் மேலான நூல்களே படிப்பு
இடிப்பது கோயில்கள் இதுஎன்ன நடிப்பு. [மக்க]

சரணங்கள்.

குளித்துப் பூசைசெய்தபின் கும்பிடுங் கையே
கொன்று தின்பதெங்களைக் கூறுங்களையே. [மக்க]
விதியொடு திருமுறை விளம்பிடும் வாயே
விழுங்குகின்ற தெங்களை மிகுமுறை யேயே. [மக்க]
உண்மையை யொருவழி யோர்கின்ற மனமே
ஊனுயிரைப் பிரிக்க வுன்னுதல் கனமே. [மக்க]
என்றும் நறுமணங்கொள் இயலுறும் நாசி
எமது துர்நாற்றத்தை யேற்பதோ சீ சி. [மக்க]

கா. மு. சுந்தரமுதலியார்.
ஆரணி தேசிய பாடசாலைத் தமிழ்ப்பண்டிதர்.

பரிபூரணராகிய சிவபெருமான் பசுக்களாகிய நம்மீதுள்ள கருணைப் பிரவாகத்தினால் நாம் மல சம்பந்தங்களினின்றும் நீங்கி உய்வடையும் பொருட்டு விலைமதிப்பில்லாத இந்த மானிடப் பிறப்பைத் தந்திருக்கிறார். சகல ஆன்மாக்களும் புல் பூடு முதலிய பிறவிகளனைத்தையுமெடுக்கும். "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிச்..................செல்லாநின்றவித் தாவர சங்கமத்து ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்" னென்றார் மாணிக்கவாசக சுவாமிகள். செனனமாகிய கழிபெருங் கடலைநீந்தி மோட்சமாகிய பேரின்பத்தை யடைதற்கு இவ்வரிய மானுடப்பிறப்பே கருவியாயுள்ளது. காலதாமசமின்றி இவ்வரிய பிறவியிலேயே நாம் செய்யவேண்டிய புண்ணியங்களனைத்தையுஞ் செய்து ஆன்மசுகந் தேடல்வேண்டும். அவையொழிந்து மேலும் மேலும் பாதகங்கள் புரியின், நாம் நிரயத்தில் விழுந்தழுந்தி மீட்டும் பூமியிலே எளிய பிறவிகளெடுத்து மலைந்து திரிவோம். இவ்வண்ணந் திரியின் நாஞ்சுகமடைவதெக் காலம்? நற்கதி யென்னே? இன்னணம் நம்மவர் பாதகங்கள் புரிந்து வாளா காலங்கழித்துப் பழுதுபோகா வண்ணம் அவர்க்குள்ள அறியாமை யென்னும் அந்தகாரத்தை யோட்டி நற்போதனையாகிய சுடரைக்கொளுத்தி முற்காலத்தார் அறியாமையாற் செய்த வழக்க வொழுக்கங்களைக் களைந்து, யாவரும் அறநெறியைக் கொண்டு பரமேஸ்வரனுடைய பாதார விந்தங்களை நாடோறும் தியானித்து நல்லருள் பெற்றுய்யுமாறு முயற்சி செய்தல் தற்கால முதுக்குறைவாளர் கடனாம்.

அம்மை வார்த்தலும் மாரியம்மையும்.

அம்மை வார்த்தலில், பெரியம்மை சின்னம்மை முதலிய பல பெயர்களால் அவரவர் குடும்பத்திற்குத் தக்கபடி மென்மையாகவும் வன்மையாகவும் அம்மை வார்த்தலும், அதற்கேற்றவாறே சில நாளிலோ பல நாளிலோ அம்மை இறங்கலும் சுகமாதலும் யாவருக்கும் தெரிந்த அநுபவம். இந்த அம்மை வார்த்தலைப் பற்றி மற்ற தேசத்தவர்க்கும், இதர சமயத்தவர்க்கும், பலவாறான அபிப்பிராய

யிருந்தபோதிலும் நமது நாட்டில் பொதுவாகவும், ஆஸ்திகமதத்தில் வந்த எல்லா ஜாதி சமயத்தவர்க்குஞ் சிறப்பாகவும், அம்மை வார்த்தல் என்பதை மாரியம்மை என்னும் ஓர் விசேஷசக்தி வாய்ந்த தெய்வத்தின் அம்சமாகப் பெரும்பாலும் எண்ணி, வந்தித்துச் சிந்தித்துப் போற்றி வருதல் நெடுநாளைய வழக்கம்.

அம்மையின் தோற்றம்.

ஓர் வீட்டில், ஓர் குழந்தைக்கு அம்மை தோன்றிற்றென்றால், அப்போதே அந்த நிமிஷம் முதலே வீடு, வாசல், பாய், தலையணை, முதலிய யாவும் சுத்தஞ் செய்து, பசுஞ்சாணத்தால் மெழுகி தெருவாசற்படி தாழ்வாரம் முதலிய பகிரங்க இடங்களில் வேப்பிலைக் கொத்துகளைச் செருகி வைத்து விடுதல் பிராமணர் ஆதியாகிய எல்லாச் சாதியார்க்கும் பொருந்திய வழக்கம்.

அறிவிப்பு.

இப்படி வேப்பிலையைச் சொருகிவைப்பதால் "இந்த வீட்டில் அம்மைவார்த்திருக்கிறது. இங்கு ஒருவரும் வரக்கூடாது. வந்தால் அம்மை நங்களையும் பற்றிக்கொள்ளும். இந்தவீட்டிலிருந்து வருவோரை நீங்களும் சேர்க்கக்கூடாது. சேர்ந்தால் இவர்களின் மூலமாய் அம்மை உங்களை வசிப்பிடமாகக்கொள்ளும். அப்போது அதற்கேற்றவாறு நீங்கள் நடந்துகொள்ளாவிட்டால் பலவாகிய கஷ்ட நஷ்டங்களும் ஒழுங்கத்தவறுதல் கண் தருடு, கை கால் முடம் முதலிய அங்கப்பழுதுகளும் உண்டாகலாம்." என்று சொல்வது போல் வேப்பிலையால் முதலிலேயே அறிவிப்பு செய்து விடுதல் நமதுநாட்டுவழக்கம்.

பயமும்—பக்தியும்.

இந்த வேப்பிலைக் குறிப்பைக்கண்டவுடனே மற்றவர்கள் இவ்விடத்தில் அம்மை வார்த்திருப்பதால் இவ்வீட்டில் பிரவேசிக்கக்கூடாதென்ற எண்ணம் உதிக்கத் தெருவில் நின்றபடியே அவ்வீட்டார்களால் வேண்டிய அவசியமான காரியத்தைப் பூர்த்திசெய்துகொள்கின்றனர். அல்லது மற்றோர் முறை பார்த்துக்கொள்வோ

மென்று வந்த வழியே திரும்பிவிடுகின்றனர். இவ்வாறு செய்வதன் காரணம், ஒன்று நம்மையும் எங்கு அம்மை பிடிக்குமோ என்ற பயம்; மற்றொன்று மாரியம்மன் என்னும் தெய்வத்தின் மீது உள்ள பக்தி. இவ்விரண்டில் எதாயிருப்பினும் அம்மை வார்த்த வீட்டில் மற்றவர்கள் பிரவேசியாமலும், ஆகாரம் முதலியவற்றில் கலந்து கொள்ளாமலும் (விலகியும்-விலக்கியும்) இன்று தங்களைக் காத்துக்கொள்ளும்படி செய்வது குறிப்பிடத்தக்கது.

விநியோகம்.

அம்மைவார்த்துள்ள வீட்டில் அரிசிமாவும் பனைவெல்லமும் கலந்து அதில் வேப்பிலையைக்கூட்டி சிறுபிள்ளைகளுக்குக் கொடுப்பதும், கூந்தல் தெளித்தல் என்று தலைக்கு ஜலத்திலும் காலங்களிலும் இப்படியே மாவும், (சருக்கரை) வெங்காயம் தயிர் கலந்த சாதத்தையும் இதர பிள்ளைகளுக்குக் கொடுப்பதும், முற்றும் சுகமானபின், கம்பும் கேழ்வரகு (கேப்பை)ச் சேர்ந்த களியில் தயிர் வெங்காயம் கூட்டிக்கரைத்துப் பிள்ளைகளுக்கும் பெரியோர்களுக்கும் மாரியம்மனின் பெயரால் விநியோகம் செய்யப்படுகிறது.

ஆகாரம்—படுக்கை.

அம்மை வார்த்துள்ளவர்கள் சிறியோராயினும் பெரியோராயினும்; சாகபட்சணியாயினும் மாமிச பட்சணியாயினும்; எல்லாருக்கும் சுத்தமான—மகா சுத்தமான இடம்—படுக்கை—துணி—விரிப்புகளும், தயிர்—மோர்—வெங்காயம் இவை கூட்டிய சாதம் அல்லது கூழும் மாத்திரமே தருவதல்லாது, அவரவர் இச்சையின்படி கார சார வஸ்துக்களையோ—பலகார பட்சணங்களையோ சித்திரான்னங்களையோ—மச்சமாம்சாதி அநாசார உணவுகளையோ—கள் சாராயமாதி குடிகளையோ எவ்வளவு பிடிவாதக்காரர்களுக்கும் கொடுப்பதில்லை யென்பது அநுபவத்திலுள்ள உண்மை.

நிர்ப்பந்தமான ஒழுக்கம்.

அம்மை வார்த்துள்ள வீட்டில், மிளகாய் பயறு, அரிசி முதலியவற்றை வறுத்தல்; மிளகாய்ப் பொடி முதலிய இடித்தல்;

அரிசி பயறு முதலிய இயந்திரத்தில் திரித்தல்; தாளிதம் செய்தல், நெல் வேகவைத்தல், நெல் குத்தல், அந்த வீட்டு எல்லைக்குள் மச்ச மாம்சங்களை சமைத்தல், உலர வைத்தல், அந்த வீட்டிலிருந்து இதர வீடுகளுக்கு எவ்விதமான ஆகார வஸ்துக்களையோ பலகார வகைகளையோ, கட்டு முட்டு சாமான்களையோ இரவல் கொடாதிருத்தல், இப்படியே இதர வீடுகளிலிருந்து ஒன்றையுமே வாங்காது நடித்தல், மண வாழ்க்கை முதலிய இல்லற ஒழுக்கங்களில் மகா சாக்கிரதையாய் நெருப்பு ஆறும் மயிர்ப்பாலமுமாக மிகப்பயங்கரத்துடனிருத்தல்; மஞ்சளெண்ணெய் தீபத்தை விலக்கி விளக்கெண்ணெய் இலுப்பை எண்ணெய் புங்க எண்ணெய் முதலிய தீபங்களையே வைத்தல். முக்கியமாய் அசுத்தங்களையெல்லாம் ஒழித்து, இடம் உடை தேகம் ஆகாரம் முதலிய எல்லா வகையிலும் பரிசுத்தமாக இருக்கவேண்டிய தென்பதும், அவ்வாறே இருந்துவருவதும் நெடுநாளைய அநுபவ வழக்கம்.

மறுமுள் சீறிக்கொள்ளல்.

இவ்வளவு சாக்கிரதையாயும் கவனிப்பாயும் கண்காணித்து வந்தும் ஒரோர் சமயம் அம்மை கண்டவர்களுக்குச் சரிவர சுகப்படாமல், மறு முள் பாய்தல் என்னும் கஷ்ட சம்பவம் நேர்ந்து விடுகிறது. இதைப் பலர் பலவாறாகச் சொல்வர். தீட்டு பட்டு விட்டது என்பர். பாய் படுக்கை தோஷம் என்பர். மச்ச மாம்சாதிகளின் வாடைபட்டது என்பர். புலால் உணவு சேர்ந்திருக்கலாம் என்பர். இன்னமும் கை கால் முடமாகும். கண் குருடாகும். கண்ணில் பூவிழும். "கலியுகத்தில் கண்கண்ட தெய்வமல்லவா மாரியம்மன்? அவளுக்குத் தலையெல்லாம் கண்களல்லவா? ஆயிரம் பதினாயிரம் கண்களைக்கொண்டு அங்கங்கும் பார்க்கக்கூடிய பராசக்தியல்லவா? அவளை ஏமாற்ற முடியுமா? தீட்டு தொடக்கு பட்டுவிட்டாலும், அன்னிய பதார்த்தம் என்னும் அசுத்த மச்ச மாம்சாதிகள் சேர்ந்துவிட்டாலும், மாரியம்மன் சீறிக்கொள்ளாமல் விடுவளா? அவள் சீற்றமே இப்படி மறு முள்ளாய் வந்து விட்டது" எனப் பல பெண்டுகளும், பாட்டிமார்களும், மீட்டி ஆர்ப்பாட்டம் செய்து காட்டியாய்ப் பேசிவருவதும் பெருவழக்கம்.

மாரியின் வீரியம்.

இவ் வழக்குகளை யோசிக்கும்போதும், அநுபவ ரீதியாய்ப் பார்க்கும்போதும், மாரி யென்னும் பெண்தேவதை அதிக வீரியம் (சக்தி) உடையதென்பதும்; அது சுத்த சாத்விக குணமுடைய தென்பதும், மோர் தயிர் கூழ் சாதம் வெங்காயம் பனைவெல்லம் அரிசி மாவு பழம் தேங்காய் இளநீர் குளிர்ந்த ஜலம் முதலியவற்றையே ஆகாரமாக அம்மை கண்டவர்களுக்குக் கொடுபடுவதால் சத்துவகுண ஆகாரமே அதற்குப் பொருத்தமுடைய தென்பதும்; சாகபட்சணம்தான் சதாசர்வகாலமும் ஆராதனைக்குரிய தென்பதும் வெள்ளிடை மலைபோல் தெள்ளிதாய் விளங்கும்.

நீராட்டல்.

அம்மை கண்டு பூரித்து பால்நிறம்பி மணம் வீசி முகமலர்ந்து இறங்குமுகம் கண்ட நாள் முதல், ௩, ௫, ௭-முறை ஸ்நானம் செய்வித்தல் என்னும் நீராட்டலுக்குச் செய்யும் விதியும் கவனித்தற்கு உரியது. மற்ற சுரம் ஜன்னி மேகம் முதலிய எந்த வியாதி கண்டாலும் சுகமானபின், ஓமம் தேய்த்துக் கலவாதவெந்நீரால் ஸ்நாநம் செய்வித்தலே வழக்கமாக வந்து கொண்டிருக்கிறது. நமது நாட்டில், அம்மை கண்டவர்க்கு வெந்நீரை விலக்கி, சுத்த ஜலத்தில் வேப்பிலைபோட்டு வெய்யிலில் சூரிய உஷ்ணம்பட வைத்து அந்த ஜலத்தைக்கொண்டு ஸ்நானம் செய்விப்பதென்பதையும், அப்போதும் வேப்பிலை மஞ்சள் அறுகம்புல் இவற்றை அரைத்துப் பூசிக்கொண்ட பின்னரே, வெந்நீர் அல்லாத சூரிய வாடைபட்ட சுத்த ஜலத்தையே ஸ்நானத்திற்கு உபயோகிக்க வேண்டு மென்பதையும்; அவ்விதம் சுத்தஜலஸ்நானம் ஆனவுடன் கூழ் அல்லது சாதம் இவைகளில் தயிர்—மோர்—வெங்காயம் கூட்டியே உணவளித்த லென்பதையும் ஆழ்ந்து கவனிப்பவர்க்கு மாரியின் வீரியம் சிராய்த்தெரியும்.

தேகத் தணிவு.

அம்மை இறங்கி ஸ்நானங்கள் செய்வித்த பின், தேகத்தின் உஷ்ணம் தணிந்து—வெப்பம் நீங்கி—நாபி குளிர்ந்து—மூளை யின்

கொதிப்படங்கி—கண்களின் வறட்சியும் எரிச்சலும் மாறி, சுகுணமுண்டாவதற்காக ஆமணக்குமுத்தெண்ணெயில் பேயன்வாழைப்பழம், வெந்தயம், சீரகம், மிளகு, பனங்கற்கண்டு, ஆவாரம்பூவிதழ் வெள்ளைவெங்காயம் இவற்றைப் போட்டு, (அனல் காட்டாமல்) சூரியபுடம் வைத்து பிரதிதினமும் காலை மாலையாக சிறிதளவு எண்ணெயும் வாழைப்பழக்கலப்புங் கொடுத்து வருவது புதுமையல்லவே.

அம்மை உஷ்ணம் ஆறு மாதம்.

இவ்வளவு கவலையோடு வந்தும், "அம்மையின் வெப்பம் ஆறுமாதம் வரையில் அஸ்தியைப் பற்றிநின்று வேதனை செய்யும்" என்ற பழமொழியின்படி சிலருக்கு பேதி, உஷ்ணபேதி, சீதபேதி, இரத்தபேதி, இருமல், சுரம், பெருவயிறு, அதிதாகம், நித்திரையின்மை, நீர்ச்சுருக்கு, நீர்க்கடுப்பு, மஞ்சள் சிகப்பு வர்ணங்களாக நீர் இறங்குதல், நீர் இறங்கிய பின் வெண்மையாக மாறுதல் முதலிய உஷ்ண ரோகங்களும் கண்ணைப்பற்றிய வியாதிகளும் கண்டு மிகக்கஷ்டப்படுவதையும் சில சமயம் கஷ்டமாய் முடிவதையும் காணாதார் கேளாதார் இலர்.

அம்மையும் வைத்திய நூலும்.

நமது வைத்திய சாஸ்திரங்களில் அமைந்துள்ள ரோக நிதானங்களின்படி அம்மையின் பேதங்கள் பதினான்குவிதங்கள் எனவும், அவைபத்தினையும் சரீரத்தில் மிகுதியான உஷ்ணம் அளவிற்குமீறி ஆக்கிரமித்து, மூலத்தில் கனல்ஏறி, மூளையில் கொதிப்பு கண்டு சரீர பேதங்களுக்குத் தக்கபடி பலவேறு பெயர்களோடு காண்பதாகவும், இப்படிக்கண்டு முற்றும் சாந்தம் ஆகும் வரையில் காரம் புளிப்பு உப்பு முதலியவற்றை அதிகமாகக் காட்டாமல் குறைந்த அளவில் சிறுகச்சிறுக உபயோகித்தும். மேல்சொன்னபடி குளிர்ச்சியான, ஸ்நான பான போஜன ஔஷதாதிகளால் பாதுகாத்தும் வரவேண்டுமென்றும் கூறியிருக்கும்.

ரோகியும் பூஜையும்.

அம்மை கண்டாலும், சுரம் தோன்றினும், வேறு வியாதிகள் அணுகினும் மாரியாயியை மனமுருகப் பிரார்த்தனை செய்து,

காணிக்கை கட்டி, அது சம்பந்தமாய் வருஷந்தோறும் மாரியம்மன் கோயிலுக்குச் சென்று பந்து மித்திரர்களுடன் கூட்டம் கூடி, தங்கள் மனம்போனபடி அபிஷேகம் வஸ்திரம் பூஜை ஆராதனை முதலிய செய்தலும் பல குடும்பங்களில் வழக்கமாயிருந்து வருகிறது. இதைப்பற்றிக் குறை கூறுவாரில்லை. இப்படிப் பிரார்த்தனையும் பூசையும் செய்துவரும் குடும்பங்களுக்கு ஆதரவளித்துப் பாதுகாத்துவரும் மாரியாயி சாகபட்சணியா (அன்னிய பதார்த்தமாகிய) மாம்சபட்சணியா? என்பது உற்று நோக்குவார்க்குத் தெற்றென விளங்கும். இப்படி சாகபட்சணிகளால் செய்யப்படும் அபிஷேக ஆராதனையின்போது அக்கோயிலருகு செல்வோருக்கு, நல்ல சுகந்த மணமும், திவ்விய பரிமள வாடையும், அலங்கார வாத்தியமும், பக்தர்களின் சிந்தை நைந்துருகிய ஸ்தோத்திரமும், கன்மனதையும் கலக்கி— இறக்கி— பக்தியென்னும் பரவசத்தில் ஆழ்த்தி விடுகின்றது. இதுவே மாரியின் பிரியபூசை.

கோயிலா? கொலைக்களமா?

தயிர் மோர் நெய் பால் கூழ் சாதம் கீரை முதலிய சாகபட்சணங்களுக்குரிய மாரியாயியின் சீரிய சந்நிதி முன், சில பல கல்நெஞ்சர்கள்—இரக்கமற்ற வன்மனத்தர்கள்—கருணையற்ற புலாலுண்போர் செய்யும் பூசை, பிரார்த்தனை யென்ற வேஷச்செயலைக் காணக் கண்களும் கூசுகின்றன; நெஞ்சம் துடிக்கின்றது; ஆவி பதறுகின்றது; தேகம் நடுக்குறுகின்றது. அந்தோ! வாயற்ற—துணையற்ற—சக்தியற்ற—ஆதரவற்ற—சேனை சைனியமற்ற—திக்கற்ற—வேறு கதியற்ற—தற்காப்பு செய்துகொள்ளும் திறனற்ற—சுருங்கக்கூறின் எவ்வெவ்வித உதவியுமற்ற-குற்றமற்ற ஆடுகோழிகளை அலறவலற கதற கதற பதற பதற துடிதுடிக்க படபடக்க கண்ணீர் ஒழுக தேகம் விம்ம ஆவிசோர, நம்மைப்போன்ற உயிர்ப்பிராணிகள்தானே யென்ற எண்ணமுமின்றி, கடவுள் படைப்பில் இவைகளும் சமம்தானே என்ற உணர்வுமின்றி, ஜீவராசிகளில் நமக்கும் இவற்றிற்கும் வேற்றுமையில்லையே யென்ற நீதியுமின்றித் தங்கள் குடும்பம்போன்று இவையும் ஓர் வகுப்புக் குடும்பந்தானே

வென்ற பரிதாபமுமின்றித் தங்கள் அருமந்த மக்கள் எதிரில், குடும்ப விருத்திக்குடைய இல்லாளுக் கெதிரில், வாழையடி வாழையாய் விருத்தியாகும்படியான, மக்கள் மருமக்கள் எதிரில், உற்றார் உறவினர் எதிரில், சுற்றத்தார் தாயாதிகள் எதிரில், சம்பந்திகள் சகபாடிகள் எதிரில் ஐயோ! கொஞ்சமும் நெஞ்சில் ஜீவகாருண்ய சிந்தனையற்று இவர்களின் கூட்டங்கள் சூழ்ந்து நின்று அவர்களின் (ஆடு கோழிகளின்) கூட்டங்களைக் கைகூசாது வெட்டி வெட்டி பிணக் குவியல்களை (ஆடு கோழிகளின் உயிரற்ற தேகங்களை) சேர்ப்பதைக் காண இது கோயிலா கொலைக்களமா? என்பதை யோசித்துப்பாருங்கள்! இந்த ஓடும் ஆடுகோழிகளின் இரத்த ஆறும் இதில் மொய்க்கும் ஈ எறும்புக்கூட்டமும், இவற்றா லுண்டாகும் நாற்றமும், இந்த, இந்த, இடங்களை யடுத்துள்ள தோப்புகளெல்லாம் இதே புலால்நாற்றத்தை யடையஎங்கும் சுடு காட்டுப்புகையும் இடுகாத்தப்பிணவாடையும் போல எந்தப்பக்கந் திரும்பினாலும் மூக்கைமூடிக்கொள்ளும்படியான அகோர, விகார, இரத்தநாற்றம்-புலால்வீச்சம் குடலைப்புரட்டி குமட்டலையுண்டாக்கி, மயக்கத்தைத் தந்து, சிலதேகிகளுக்கு இதேகாரணமாய் பித்தசம்பந்தமான பல வியாதிகள் உண்டாகவும் நேர்ந்துவிடுகிறது என்பது அநுபவசாலிகள் அறிந்த உண்மை. எனவே, இது கோயிலல்ல! கொலைக்களமே!! இத்தகைய கொலைப்பலியைக்கண்டவுடனே (மாரி) என்னுந் தேவதை அந்தக்கோயிலைவிட்டு (மாறி)ப் போய்விடுதல் திண்ணம்! திண்ணம்!! திண்ணம் !!!

மாரிக்கல்ல! முன்னடையானுக்கு!

இப்படிக் கோயிலை கொலைகளமாக்குவது மாரிக்குச் சிறிதும் சம்பந்தப்பட்டதல்ல! கோயிலின் புறத்தில் காவலாளியாகவுள்ள முன்னடையான்களாகிய துர்தேவதைகளுக்கே பலியிடுவது என்று சமாதானம் சொல்லிக்காலந்தள்ளுவாரும் சிலருளர். இவர்களின் இந்த விபரீதக்கூற்று கொலைக்களக் கோரத்திலும் மகாகொடிய பெருங்கோரமாயிருக்கிறது. பாவத்திலும் பஞ்சமகாபாதகங்களை விட அதிகமாகிறது. ஒரு சந்நிதிமுன் செய்யப்படும் எல்லாவைபவங்களும் சந்நிதிக்குடைய கர்த்தாவுக்கேயன்றி மற்றையோருக்கு எவ்வகையிலும் பொருத்தமாகா! பொருந்தவுமுடியா!

வீரகாகளம்.

(வெற்றிவீரன் எழுதுகிறார்.)

ஹிந்து மக்களுள் ராமாயணத்தை யாவரும் அறிந்தேயிருக்கின்றனர். ராமாயணத்தைப் படித்தவர் பரதாழ்வாரை யறியாதிருக்கமுடியாது. பரதன் ஒரு சிறந்த வீரன்! இந்த உலக வாழ்வைத் துரும்பென மதித்த சுத்தவீரன்! தசரத சக்ரவர்த்தியின் மூத்த மனைவியின் பிள்ளையாகிய ஸ்ரீராமபிரானுக்குப் பட்டங் கட்டுவதற்கு நாள்வைத்து வேலைகள் யாவும் நடைபெற்றன. உலகமே மகிழ்ச்சிக் கடலில் திளைத்துக்கொண்டிருந்தது. நகர் முழுமையும் அலங்காரஞ் செய்யப்பட்டுவிட்டது. பார்த்தாள் இளைய மனைவியாகிய கைகேயி. தனது பிள்ளையாகிய பரதனுக்குப் பட்டங் கட்டவேண்டுமென்று கருதினாள். அரசனிடம் சென்றாள். பரதனுக்குப் பட்டங்கட்டவேண்டுமென்று கேட்டாள். ஸ்ரீராமபிரானைக்காட்டுக்கு அனுப்பமுடியாமல் தவித்தான். அந்தக் காரியத்திற்கு அவன் மனம் இணங்கவில்லை. என்றாலும் முன்னொரு காலத்தில் புத்தி மருண்டுபோய்க் கொடுத்திருந்த வரத்திற்குக் கட்டுப்பட்டு இணங்கித் தொலைத்தான். ராமபிரான் காட்டுக்குப் போய்விட்டார். அதே கவலையாயிருந்து செத்தான் அரசன். பரதன் பாட்டனார்வீட்டிலிருந்தபடியால் அங்கே ஆள் அனுப்பினார்கள். வந்தார் பரதன். பார்த்தார் நகரமிருந்த நிலையை! தாயாரின் மாளிகைக்குச்சென்றார்! நடந்ததென்னென்று கேட்டார். "அப்பா! உன் தகப்பன் இறந்துபோனான்; உன் தமயன் மனைவியோடும் இலக்குமணனோடும் காட்டுக்குச் சென்று விட்டான்; ராஜ்யத்தை உனக்கு வாங்கி வைத்திருக்கிறேன்" என்று சொன்னாள் பரதனுக்குத்தாயாகவந்த கைகேயி. கேட்டான் பரதன். என்ன செய்தான் தெரியுமா? ராஜ்யம் சிக்கிப்போய்விட்டதென்று மகிழ்ந்தானா? ராஜாதிராஜனாகும் சக்ரவர்த்திப் பதவியை விரும்பினானா? அந்தப்பாவி சொன்ன வார்த்தையையாவது கேட்டானா? இல்லை. தர்மத்திலே நாட்டமுடைய சுத்தவீரன் மனம் இவற்றுக்கு இடங்கொடுக்குமா? புறப்பட்டான் ஊரைவிட்டு! வனம் வனமாகக்கடந்து வந்தான் பரதன்! தாய்வாங்கிக்கொடுத்த அரசுரிமையைத் தீவினையென்ன நீத்த பரதாழ்வான் ஆறாக் கண்ணீர் பெருகத் தவசிக்கோலமாகக் கதறித்

கொண்டு விழுந்தான் ஸ்ரீராமபிரானின் திருவடியில்! பின்னர் ராம பிரானின் திருவாக்கை மறுக்கமுடியாமல் அவருடையபாதுகையை அரசனுக்கித் தான் ஒரு வழியதை நின்று உலகபோகத்தையுந் துறந்து அவர் வருமளவும் சந்நியாசியாகவிருந்து அந்த ராஜ்யத் தையாண்டான்! தர்மத்தை நிலை நிறுத்தும் வீரபுருஷனுக்கு உலகத் தில் வேறொன்றும் பொருளாகத் தோன்றுவதில்லை.

* * *

திருவாரூரிலேமனுநீதிகண்ட சோழமகாராஜன் அரசாண்டார். அப்பெருமானைப் பெரியபுராணம்படித்த ஒவ்வொருவரும் அறிவர். அவன் ஒரு வீரன்! காருண்யவீரன்! அவன் ஆட்சி முறை நடந்த காலத்தில் குறைபுள்ளவர்கள் முத்திரைக்கடுதாசியில் மநு எழுதிக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. அரண்மனைவாசலில் ஒரு பெ ரிய மணி கட்டப்பட்டிருக்கும். குறையுள்ளவர்கள் அந்த மணியை அடிக்கவேண்டுமென்பது விதி. ஆனால் அந்தமணி கட்டிய நாள் தொட்டு அடிபட்டதே கிடையாது. அப்படித் தூங்கிக்கொண்டி ருந்த மணியை ஒரு நாள் ஒருபசுவானது கதறிப்பதறிக்கொண்டு ஓடிவந்து தன் கொம்பினால் ஆட்டி அடித்தது. கொலு வீற்றிரு ந்த அரசன் காதில் இந்த மணியோசை கேட்டது. என்ன செய் தான்! அங்கேயிருந்துகொண்டு ஆள் அனுப்பினானா? அங்கிருந்தவ ரிடமாவது கேட்டானா? ஒன்றுமில்லை. சிம்மாசனத்திலிருந்து குதித்தான்! வந்து வாயிலில் விழுந்தான்! கண்டான் காராவை! அதன் துயரத்தைப் பார்த்தான்! பொறுக்க முடியவில்லை. பசு வானது முன்செல்ல அரசன் பின்சென்றான். வெளிவிதிக்கு வந் தார்கள். அரசன் அறிந்தான் காரணத்தை! மன்னன் மகன் விளையாட்டாக ரதத்திலேறி வேகமாக ஓட்டிக்கொண்டு வரும் போது பயமறியாத இளங்கன்று துள்ளிக்குதித்துத் தேர்க்காலில் அகப்பட்டு இறந்து கிடந்தது. இப்போது ஏழை ஆட்டுக்குட்டி களை ரத்தஞ்சொரியக் கழுத்தறுக்கின்றார்களே பாவிகள். அப்படி அரசன் " இதுவும் சரிதான் " என்று கருதவில்லை. துடித்தான்! கண்ணீர் சொரிந்தான். மந்திரிகளைக் கேட்டான்! பிராமணரை யழைத்து இதற்கு என்ன பரிகார மென்றான். அவர்களும் ஏட் டை யவிழ்த்துப் பார்த்து, தங்கப் பசு செய்து தானம் பண்ண வேண்டு மென்றனர். இது அரசனுக்குப் பிடிக்கவில்லை. " பசு வின் கன்றை ஒருவன் கொன்றுவிட்டான். அதனால் தன் மகவை யிழந்து பசு தவிக்கிறது. தன்னுயிர்போல் பிற உயிர்களைக் கருத வேண்டியது எனது கடமை! இப்போது இந்தப் பசுவானது எப் படிப் புத்திர சோகத்தை யடைந்திருக்கிறதோ அப்படியே நானும்